# அரசு ஊழியர்

**2022 ஏப்ரல் மலர்:43 இதழ்:04**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**
**அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு**
**ஆசிரியர் : ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

**இதழ் வடிவமைப்பு:**
**ஆர்.காளத்தி** *9677003178*

ஆண்டுச் சந்தா : *ரூ.100*
தனி இதழ் : *ரூ.10*

**முகவரி:** *பழைய எண். 48 புதிய எண் 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.*
e-mail : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:** *சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை-600002*


## சூடா ஒரு கோப்பை சூப்

மனிதனுக்கு மனிதன்
சரியான உறவுகள்
கொள்வதைத் தடுக்கின்ற
எந்த ஒரு மதமும்
மதமே அல்ல...
அது அடக்குமுறையின்
அடையாளமே!...

*- டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்*

தலைவர் மடல்

## வேற்றுமை வேரறுப்போம்!
## ஒற்றுமையை கட்டமைப்போம்!!
## நம் அமைப்பு தினத்தில் உறுதியேற்போம்!!!

“முதலாளிகளின் உடைமைகளையும் ஆட்சியையும் பாதுகாக்கின்ற அதிகமான ஜனநாயம் இருக்கின்ற குடியரசில் உள்ள அதிக ஜனநாயக ரீதியான நாடாளுமன்றமும் கூட சுரண்டல்காரர்களின் சிறு குழுக்கள் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களை அடக்குவதற்கு பயன்படும் இயந்திரமே” – வி.இ.லெனின்

கடந்த சில நாட்களாகவே அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் முனுமுனுக்கும் ஒரே வார்த்தை “விலைவாசி உயர்வு”. ஆனால் மக்களின் வருமானம் உயரவில்லை. அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் விலை உயர்ந்து விட்டது. நான் கூறுவது நமது பக்கத்து நாடான இலங்கையை பற்றியல்ல நாம் வாழும் இந்தியாவை பற்றித்தான். நாளுக்கு நாள் பெட்ரோல் ரூ.110 ஐ கடந்தும் டீசல் ரூ.100 ஐ கடந்தும் விலை உயர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்நிலையில் டிராக்டரை பயன்படுத்தும் விவசாயிகள் டீசல் விலை உயர்வால் நொந்து போகிறார்கள். டீசல் மற்றும் சுங்க கட்டணம் விலை உயர்வால் தமிழகம் முழுவதும் 2.00 லட்சம் லாரிகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதால் சுமார் 5.00 லட்சம்பேர் வேலையிழந்துள்ளனர் என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. தமிழகம், கேரளா, புதுச்சேரி, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட ஏழுமாநிலங்களில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடஉள்ளதாக லாரி உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர். எரிவாயு உருளை விலையால் நடுத்தர மற்றும் எளிய குடும்பங்கள் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. வணிக பயன்பாட்டுக்கான எரிவாயு விலையேற்றத்தால் உணவு விடுதிகளிலும், டீ கடைகளிலும் விலையேற்றம். இதனால் நடுத்தரகுடும்பங்கள் ஏழை எளியோர், வெளிமாநிலங்களிலிருந்து பிழைப்புக்காக வந்துள்ள முறைசாரா தொழிலாளர்கள் அன்றாடங்காய்ச்சிகள் என அனைத்து தரப்பு மக்களும் அல்லல்படுகின்றனர்.

எரியும் கொள்ளியில் எண்ணை ஊற்றுவது போல அத்தியாவசிய மருந்துகளின் விலை 10.70 சதவீதம் உயர்த்திக்கொள்ள இந்திய மருந்து விலை நிர்ணய ஆணையம் அறிவித்துள்ளது. தொற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் சாதாரண வலிநிவாரணி மருந்துகள் வைட்டமின்கள், இதய நோய்கள், ரத்த அழுத்தம், கொரோனா சிகிச்சை மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய உயிர்காக்கும் மருந்துகளின் விலையேற்றம் என்பது மக்களின் உயிருடனும், அவர்களின் ஆரோக்கியத்துடனும் ஒன்றிய அரசின் அலட்சியப்போக்கை காண்பிக்கிறது. அத்தியாவசிய மருந்துகள் தயாரிக்கும் மருந்து கம்பெனிக்கு ஒன்றிய அரசு மானியத்தை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். மாறாக கார்ப்பரேட்டுகளின் நலன்களில் அக்கறை காட்டினால் நாடு சுடுகாடாக மாறுவதை வேடிக்கை பார்க்கும் அரசாகத்தான் இருக்கும். நாட்டின் பொருளாதாரம் பெரும் பள்ளத்தில் கிடக்கிறது. இங்கே வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்குமான இடைவெளி அதிரித்துக்கொண்டே செல்கிறது. இக்காலகட்டத்தில் கௌதம் அதானியின் சொத்து மதிப்பு 261 சதவீதம் அதிகரித்து ஆசியாவிலேயே இரண்டாவது பெரும் பணக்காரராக உள்ளார். பொருளாதார குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பட்டினிக்குறியீட்டில் நாடு பின்தங்கி செல்கிறது. தனிநபர் வருமானம் குறைந்து வேலையற்றோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பாலின சமத்துவமின்மையில் நாடு முதலிடத்தில் உள்ளது.

15வது நிதிக்குழு தமிழ்நாட்டிற்கு நிதி உதவி தரவேண்டுமானால் 10 ஆண்டுகளுக்கு மேல் உயர்த்தப்படாத நகர்ப்புற சொத்துவரியை உயர்த்திடவேண்டுமென்றும், அவ்வாறு இல்லையென்றால் உள்ளாட்சிகளுக்கு எவ்வித மானிய உதவியும் கிடைக்காது என்று ஒன்றிய அரசு கூறியுறுப்பதும் அதனால் சொத்து வரி கடுமையாக உயர்ந்து இருப்பதும் சாமானிய மக்களின் மேல் ஏற்றப்பட்டுள்ள பெருஞ்சுமையாகும். இந்நிலை நீடிக்குமானால் இலங்கை மக்களைப் போன்று இந்தியர்களும் வீதிகளில் இறங்கி போராடுவது என்பது வெகு தொலைவில் இல்லை.

அகில இந்திய மாநில அரசு ஊழியர்கள் சம்மேளனத்தின் 17வது தேசிய மாநாடு பீகார் மாநிலம், பெகுசராயில் ஏப்ரல் 13முதல் 16 வரை நடைபெற உள்ளது. அதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் பிரதிநிதிகள், தேசிய செயற்குழு உறுப்பினர், தேசிய நிர்வாகிகள் உட்பட 37 பேர் பங்கேற்க உள்ளனர். புதிய பென்சனை இரத்து செய்து அனைவருக்கும் பயனளிக்ககூடிய ஓய்வூதியதிட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும். அரசுத்துறைகளில் தொகுப்பூதியம், மதிப்பூதியம் ஒப்பந்த முறையினை நிறுத்தவேண்டும். நாடுமுழுவதிலும் அரசுத்துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பவேண்டும், அத்தியாவசிய பொருட்கள், மருந்துகள் எரிபொருட்கள் உள்பட விலைவாசி உயர்வை கட்டுப்படுத்திட வேண்டும் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் பொதுமக்கள் வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுக்கும் மாநாடாக அமைய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வோம்.

தமிழகத்தின் அரசு ஊழியர்களின் வாழ்வின் விடிவெள்ளியாக, அரசு ஊழியர்களின் உரிமைகளை பாதுகாப்பத்தில் அரணாக விளங்கும் நமது அமைப்பு 06.05.2022ல் 38 ஆண்டுகளை கடந்து தனது வீரத்தினை இன்னும் கூர்தீட்டிக்கொண்டு, வெற்றியை பறைசாற்றிக்கொண்டு, உரிமைகளை மீட்டெடுக்கும் சமரசமற்ற போராளியாக தன்னை மெருகேற்றிக்கொண்டு எட்டுதிக்கும் வீரநடை போட்டுக்கொண்டிருக்கிறது.

அரசு ஊழியர்கள் அனைவரும் ஓய்வூதியம் பெறவேண்டும். காலமுறை ஊதியம் அனைவரும் பெறவேண்டும். அத்தியாவசியப்பொருட்களின் விலையர்வை கட்டுப்படுத்திடவேண்டும். அனைவருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கி வாழ்க்கைக்கான ஊதியத்தை உத்தரவாதப்படுத்தவேண்டும். நம்முன்னோர்கள் காட்டிய பாதையில் வேற்றுமையை வேரறுப்போம்! ஒற்றுமையை கட்டமைப்போம்!! என 38வது அமைப்பு தினத்தில் உறுதியேற்போம்.!!!

அனைவருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அமைப்பு தின வாழ்த்துகள் ●

### 2022 மார்ச் 28,29

### அகில இந்திய வேலை நிறுத்தம் மகத்தான வெற்றி

# வரலாற்றுச் சிறப்புமிக்க வர்க்கப் போராட்டம்

நம் மரணத்தின் எல்லை வரை மட்டுமல்ல... மரணத்திற்குப் பின்பும் வரும் தலைமுறைகள்... காலத்தாலும் நம் நினைவுகளைப் பகிரந்து கொள்ளும்... வார்த்தைகளில் வடிக்க முடியா... எழுச்சிமிகு போராட்டம்...

ஆம் மார்ச் 28,29 ஆம் தேதி அகில இந்திய வேலை நிறுத்தம் மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் சுயேச்சையான துறைவாரி சம்மேளனங்கள் / சங்கங்களின் கூட்டு மேடை அறைகூவலுக்கிணங்க நடைபெற்ற இரண்டு நாள் அகில இந்திய வேலை நிறுத்தம் மகத்தான வெற்றி பெற்றிருப்பதற்கு குறிப்பாக இந்திய தொழிற்சங்க மையம்(சிஐடியு) மாநில அரசு ஊழியர்கள், மத்திய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் என பல லட்சக்கணக்கானவர்கள் நாடு முழுவதும் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்ஙகளிலும், வேலை நிறுத்தத்திலும் பங்கேற்றுள்ளனர். வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வேலை நிறுத்தம், அரசு ஊழியர், ஆசிரியர், தொழிலாளார்களின் கோரிக்கைகளுக்காக மட்டும் அல்ல ஒன்றிய அரசாங்கத்தின் தேசவிரோத, நாசகரக் கொள்கைகளுக்கு எதிராகவும் ஒன்றிய அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

இந்திய தேசத்தின் மக்களை பாதுகாப்போம். தேசத்தை பாதுகாப்போம் என்ற முழக்கத்துடன் உழைப்பாளி மக்களின் வர்க்கப் போராட்டம், இந்திய தேசத்தின் மக்கள் பாதுகாக்கப்படும் என்று வாக்களித்த மக்களுக்கு ஆட்சியதிகாரம் கையில் இருக்கிறது என்பதற்காக அதிகார மமதையுடன் ஊழியர்களுக்கும், மக்களுக்கும் விரோதமாக நடந்து கொள்கிறது மத்தியில் அமைந்துள்ள மோடி அரசு. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் சட்டத்திருத்தங்கள் பெரும்பாலும் மக்களுக்கும், ஊழியர்களுக்கும் எதிரானதாகவே அமைந்துள்ளன. தொழிலாளர் நலச் சட்டங்களை திருத்துவதன் மூலம் குறைந்தபட்ச சட்ட சமூக பாதுகாப்பிலிருந்தும் துண்டிக்கப்பட்டு தொழிலாளர்கள் நிர்க்கதியாக விடப்படுகிறார்கள். இனியும் இதை அனுமதிக்க முடியாது என்று இந்திய தொழிலாளி வர்க்கமும், மக்களும் போர்க்கோலம் பூண்டதன் வெளிப்பாடு தேசம் தழுவிய வேலை நிறுத்தம்.

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளினால் பாதிக்கப்படும் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதை தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு மத ரீதியாக மக்களை கூறுபோடும் சட்டங்களும், திட்டங்களும் கொண்டு வரப்படுகின்றன. தேசம் முழுவதும் அசசுறுத்துகின்ற வகையில் குடியுரிமை சட்டத்திருத்தம் உள்ளிட்ட மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றுள்ளது.

இந்த போராட்டத்தை ஒடுக்குவதற்கு பல்வேறு அடக்கு முறைகளை ஏவி விட்டது ஒன்றிய அரசு. அதையும் உடைத்தெறிந்து இந்த வேலை நிறுத்தத்தில் பல மாநிலங்களில், குறிப்பாக கேரளா, திரிபுரா மற்றும் தமிழ்நாடு, ஹரியானா,

மேற்குவங்கம், அசாம் முதலான மாநிலங்களில் பொது போக்குவரத்தும், தனியார் போக்குவரத்தும் பங்கேற்றதன் காரணமாக "பந்த்" போன்று மாறியது. பல இடங்களில் சாலை, ரயில் முற்றுகைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றுள்ளனர்.

தொழிற்சங்கங்கள், கடைகள், அலுவலகங்கள் மற்றும், வணிக நிறுவனங்கள் வெறிச்சோடிக் கிடந்தன. பெரிய தொழிற்சாலைகள் உள்ள மையங்களில் வேலை நிறுத்தம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. பல மாநிலங்களில் "எஸ்மா பாயும் என்றும் எட்டு நாள் ஊதியம் வெட்டப்படும்" போன்ற எண்ணற்ற மிரட்டல்கள் விடுக்கப்பட்ட போதிலும் (தமிழகத்தில் திமுக இந்த வேலை நிறுத்ததிற்கு ஆதரவு தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.) அவற்றை துச்சமெனத் தூக்கியெறிந்து உழைக்கும் மக்கள் மத்தியிலும், மத்திய-மாநில அரசு ஊழியர்கள் மற்றும் மத்தய தொழிற்சங்கங்களின் அறைகூவலுக்கு மிகப்பெரிய அளவில் மதிப்பளித்து நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பாற்றிட முன்வந்துள்ளனர்.

பல மாநிலங்களில் கடந்த காலங்களைவிட வந்துள்ள தகவலின்படி மகாராஷ்டிரா, தமிழ்நாடு, மேற்குவங்கம், தில்லி,தெலங்கானா, கர்நாடகா மற்றும் ஹரியானா போன்ற மாநிலங்களில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் பிரம்மாண்டமாக நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக தூத்துக்குடி துறைமுகம், பாரதீப் துறைமுகத்ததில் வேலை நிறுத்தம் முழு வெற்றி பெற்றிருக்கிறது. பல இடங்களில் கணிசமான அளவிற்கு இருந்திருக்கிறது.

அசாம் வடகிழக்கு மாநிலங்கள், கொச்சி, மங்களூர் ஆகிய இடங்களில் உள்ள எண்ணை சுத்திகரிப்பு மற்றும் சமையல் எரிவாயு ஆலைத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் பெரிய அளவில் பங்கேற்றதை பார்க்க முடிந்தது. இன்சூரன்ஸ், வங்கிகளில் வேலை நிறுத்தம் முழுமையாக நடந்துள்ளது.

நாடு முழுவதும் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளில் பணிபுரியும் ஊழியர்களும் குறிப்பாக அஞ்சல், வருமானவரி மற்றும்இதர பெரிய துறைகளில் பணிபுரியும் ஊழியர்களும் பெருமளவில் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றுள்ளனர். கேரளா, ஹரியானா, பஞ்சாப், திரிபுரா, தமிழ்நாடு, ஜார்கண்ட் மற்றும் பீகார் மாநில அரசு ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் கணிசமான அளவிற்கு பங்கேற்றுள்ளனர். பி.எஸ்.என்.எல். பெரும் அளவில் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றுள்ளன என்று தரவுகள் கூறுகின்றன.

கர்நாடகா மாநிலத்தில் பொம்மசந்திரா பிடாபி பீன்யான போன்ற பெங்களூருத் தொழிற்சாலை பகுதிகளில் இயங்கிடும் தனியார் உற்பத்தி பிரிவுகளில் வேலை நிறுத்தம் முழு வெற்றி பெற்றுள்ளது. அதேபோன்று ஹைதராபாத் அருகில் செர்வபள்ளி தொழிற்பேட்டை பகுதியும் முழுமையாக மூடி இருந்தது. தெலங்கானாவில் உள்ள சாண்ட்லிக் மற்றும் தோஷிபா போன்ற பன்னாட்டு நிறுவனங்களிலும் முழு வேலை நிறுத்தம் நடந்துள்ளதைப் பார்க்க முடிந்தது.

தமிழ்நாட்டில் உள்ள செங்கல்பட்டு, காஞ்சிபுரம் தொழில்பேட்டைகள் அனைத்திலும் வேலை நிறுத்தம் முழு வெற்றி பெற்றுள்ளது. பல மாநிலங்களில் பொது போக்குவரத்து (தமிழ்நாட்டில் முழுமையாக ஸ்தம்பிக்கப்பட்டது) ஆட்டோ, டாக்சி, ஓலா மற்றும் ஊபேர் போன்ற சாலைப் போக்குவரத்து துறைகளும் செயல்படவில்லை.

தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஆந்திரம் மற்றும் ஹரியானா ஆகியவற்றில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழிலாளர்களும் அநேகமாக

ஒட்டுமொத்தமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

### கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

கட்டுமான தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், சுமைப்பணி தொழிலாளர்கள், தனியார் போக்குவரத்து ஊழியர்கள் உட்பட கோடிக்கணக்கான முறைசாராத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இரு நாட்களும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களிலும் பெருவாரியாக கலந்த கொண்டனர். அங்கன்வாடி, ஆஷா, மதிய உணவு ஊழியர்கள் உட்பட 80 லட்சத்திற்கு மேற்பட்ட திட்டப்பணி முன்னணி ஊழியர்கள்(Schemed Workers) இத்துறைகள் முற்றிலும் ஸ்தம்பிக்க வைத்துள்ளனர்.

கடைகளில் வேலை செய்யும் பணியாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கயிறு தொழிலாளர்கள் போன்ற பாரம்பரியத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் மிகப் பெரிய அளவில் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றுள்ளார்கள். வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர்கள் நாள் முழுவதும் சாலை மறியல், ரயில் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்த அகில இந்திய வேலை நிறுத்தம் குறித்து மக்கள் மத்தியில் பெரிய அளவில் கொண்டுச் செல்லப்பட்டது. இம்முற்றுகைப் போராட்டங்களில் விவசாய சங்கங்களும், விவசாய தொழிலாளர் சங்கங்களும் பெரும் அளவில் கலந்து கொண்டுள்ளார்கள். பல மாநிலங்களில் கிராமப்புற ஹர்த்தால் நடைபெற்றுள்ளது.

மேற்கண்ட ஒன்றிய அரசின் ஊழியர் விரோத, மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக இதுவரை இல்லாத அளவில் எல்லா பிரிவினரும் பங்கேற்றுள்ளார்கள். இப்படிப்பட்ட மகத்தான போராட்டங்களில் நமது சங்கமும் பங்கு கொண்டது பெருமைக்குரியதாக இருக்கிறது. அகில இந்திய அளவில் நடைபெறும் அனைத்து வேலை நிறுத்தங்களிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும், தமிழ்நாடு அரசு அனைத்துத்துறைவாரி சங்கங்களின் போராட்டக்குழுவும் இணைந்து மிக எழுச்சிகரமாக கடந்த காலங்களில் பங்கேற்றுள்ளோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டு அறைகூவல் தீர்மானத்தின் அகில இந்திய வேலை நிறுத்தத்தில் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டு அதனைத் தொடர்ந்து 22.3.2022 அன்று மதுரையில் கூடிய அனைத்துத்துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக்குழு முடிவு செய்யப்பட்டு மாநிலம் முழுவதும் மாவட்டங்களில் நோட்டீஸ்,போஸ்டர், மிக எழுச்சியான பிரச்சாரம் மாவட்ட மையங்களில் நடைபெற்றது. துறைவாரிச் சங்கங்களும் தங்களது துறை சங்க மாநில செயற்குழு கூடி முடிவு எடுத்து போஸ்டர்களும், நோட்டீசும் போடப்பட்டது. மாநில முழுவதும் மிக சக்தியாக பிரச்சாரக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றது.

நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தத்தில் இதுவரை இல்லாத வகையில் பல மாவட்ட மையங்கள் மத்திய, மாநில, பொதுத்துறை ஊழியர்களின் கூட்டமைப்பு ஏற்படுத்தி மிகச் சிறப்பாக வேலை நிறுத்த கருத்தரங்கங்கள் நடைபெற்றுள்ளது. ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத சட்டங்களை கண்டித்து நாடு முழுவதும் நடைபெற்ற வேலை நிறுத்ததில் 25 கோடிக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். தமிழகத்தில் பொது போக்குவரத்து 90 சதவீதத்திற்குமேல் இயங்கவில்லை.

ஒன்றிய (பி.ஜே.பி) அரசின் கொள்கைகளால் ஒட்டுமொத்த இந்திய மக்களின் வாழ்நிலைமையும், வாழ்வாதாரங்களும் மிகக்கடுமையான துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிற

இந்த தருணத்தில் இந்த வேலை நிறுத்த போராட்டம் நடந்துள்ளது. இந்த அகில இந்திய வேலை நிறுத்தத்தில் புதியதொரு அம்சம் என்னவென்றால், ஏற்கனவே சொன்னதுபோல் எல்லா தரப்பு மக்களும் இணைந்து குறிப்பாக விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் ஒன்றிய அரசை எச்சரிக்கும் பொருட்டு பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றுள்ளது. மேலும் சட்டத்தின் மீதான கொடூராமான தாக்குதலுக்கு எதிராக களத்தில் சமர்புரிந்து வரும் மாணவ சமூகம் இந்த வேலை நிறுத்தத்தில் முக்கிய பங்கினை ஆற்றியுள்ளனர்.

### ஒன்றிய அரசு எல்லாவற்றையும் சந்தை தீர்மானிக்கும்

எல்லாவற்றையும் சந்தை தீர்மானிக்கும் என்பது எங்களின் பழைய சித்தாந்தம் எல்லாவற்றிலும் தலையிட்டு கார்ப்பரேட்டுகளுக்கு ராஜபாட்டை அமைத்துக்கொடுத்து சில ஏகபோக முதலாளிகளை உருவாக்குவதுதான் எங்கள் திட்டம் என்று ஒன்றிய ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள். இல்லை இல்லை நீங்கள் பதவி ஏற்கும்போது அரசமைப்புச் சட்டத்தின்படி நடந்து கொள்வேன் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டுதான் பதவி ஏற்றீர்கள். அரசமைப்புச் சட்டம் ஏகபோகத்தினை தடுக்கும் வகையில் சட்டமியற்ற வேண்டும் என்று வழிகாட்டும் நெறிமுறை தெளிவாக கூறியுள்ளது. எனவே எல்லோருக்கும் வருமானப் பகிர்வு சமமாகக் கிடைக்கும் வகையில் சட்டமியற்ற வேண்டும் என்று தொழிலாளி வர்க்கம் கூறுகிறது. அதை ஒன்றிய அரசு மறுக்கிறது. அதை எதிர்த்து தொழிலாளி வர்க்கம் போராட்டம் நடத்துகிறோம்.

### வேலையின்மை – வேலை நேரம் அதிகரிப்பு

இந்த வேலை நிறுத்தத்தின் பிரதான கோரிக்கை வேலையின்மைதான். 45 ஆண்டுகள் இல்லாத நிலை இந்திய தேசத்தில் ஏற்பட்டுள்ளது. இது நவீன தாராளமயத்தின் விளைவு. ஒன்றிய அரசு வேலை உருவாக்குவதற்கு பதிலாக வேலை மறுக்கப்படுகிறது. விடுதலை இந்தியாவில் முதல் அரசு தொடங்கி இன்று (பி.ஜே.பிஅரசு) வரை வேலையின்னையை விரட்டுவோம் என முழங்குகிறார்கள். இன்னும் தீர்ந்தபாடில்லை. நமது பிரதமர் அவர்கள் பதவி ஏற்றவுடன் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்று வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படவில்லை. மத்திய, மாநில அரசு வேலையை இளைஞர்கள் எதிர்பார்க்கக்கூடாது. சுய தொழில் செய்து அதவாது பானிபூரி, பகோடா விற்று பிழைத்துக் கொள்ளுங்கள் என்று நமது பிரதமர் கூறுகிறார். இந்தியாவில் இளைஞர்கள் குறைந்த கூலிக்கு உழைப்பை விற்க வேண்டியுள்ளது. குறிப்பாக கார்ப்பரேட் முதலாளிகளின் லாபவெறிக்கு இளைஞர்கள் நசுக்கப்படுகிறார்கள்.

அதேபோல் இந்தியாவில் 4 இளைஞர்களில் ஒருவருக்கு வேலையில்லை. 5.3 கோடிபேர் வேலை இல்லை. அதில் 2.40 லட்சம் பேர் மாத சம்பளம் வாங்கியவர்கள் இந்த கொரோனா காலத்தில் வேலை இழந்து நிர்கதியாக நிற்கிறார்கள். வேலை கேட்டு போராட்டம் நடத்தினால் அவர்கள் எல்லாம் கம்யூனிஸ்ட் என்கிறார் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா. இதுதான் ஒன்றிய அரசின் லட்சணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

எனவே தொழிலாளர் சந்தையில் நாளுக்கு நாள் வேலையில்லா பட்டாளங்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டு போகிறது. வேலையின்மை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. வேலைக்கு எடுக்காவிட்டால் கூலி அல்லது சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை. வேலையில்லா பட்டாளம் மிகப்பெரும் எண்ணிக்கையில் இருப்பதைக் காட்டி ஏற்கனவே வேலையில் இருப்பவர்களின் அனைத்து உரிமைகளையும் பறித்து கொள்ள முடியும்(உதாரணம் : பி.எஸ்.என். எல். நிறுவனம் கட்டாய ஓய்வு என்ற பெயரில் 79 ஆயிரம் பேர் வீட்டுக்கு

அனுபபப்பட்டுள்ளனர்.) அதிக நேரம் குறைந்த ஊழியர்களை கொண்டு வேலை நேரத்தை அதிகரித்து குறைந்த செலவில் கூடுதல் உற்பத்தி, பணி செய்ய முடியும் என்று முதலாளித்துவம் அதிதீவிரமான உழைப்புச் சுரண்டலை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.(உதாரணம் : ஒன்றிய அரசு தொழிலாளர்களை ஒட்ட சுரண்டுவதுதான் எங்கள் கொள்கை. எனவே நாங்கள் மாநில அரசுகள் மூலமாக வேலை நேரத்தை நாளொன்றுக்கு 8 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரமாக மாற்றுகிறோம் என்று ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள். 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் உறக்கம், 8 மணி நேரம் ஓய்வு என்பது நூறாண்டுக்கு முன்பு எங்கள் மூதாதையர்கள் போராடிப்பெற்று தந்த உரிமை ஒரு போதும் விட்டுத் தரமாட்டோம். வாரம் 5 நாட்கள் 35 மணி நேரம் வேலை எங்கள் கோரிக்கை என்று பாட்டாளிகள் சொல்கிறார்கள். எனவே வேலையின்மை என்பது முதலாளித்துவம் உற்பத்தி செய்திருக்கிற பயங்கரமான சுரண்டல் ஆயுதம் என்கிறது இந்த வேலை நிறுத்தப் போராட்டம்.

### பொதுத்துறைகள் அரசின் கையில் இருக்க வேண்டும்.

உற்பத்தியில் ஈடுபடுவது அரசின் வேலை இல்லை. பொதுதுறை நிறுவனங்கள் என்பதே மரணிப்பதற்காக பிறந்தன. எனவே எல்லா தொழில்களிலிருந்தும் அரசு வெளியேறிவிடும். சில கேந்திரமான தொழில்களில் மட்டும் அரசு பெயரளவிற்கு இருக்குமென்று ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள். இல்லை உற்பத்தியில் ஈடுபடுவது அரசின் கடமை. பொதுத்துறை நிறுவனங்கள்தான் பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கான கருவிகளாக செயல்படுகின்றன. குறிப்பாக பாதுகாப்பு(Defence)சக்தி (Energy) போக்குவரத்து (Transport) தொலைத்தொடர்பு (Communication) நிதி(Finance) கல்வி (Education) சுகாதாரம்(Health) உள்ளிட்ட அனைத்து கேந்திரமான துறைகளும் அரசின் கையில்தான் இருக்க வேண்டும் என்று தொழிலாளி வர்க்கம் கூறுகிறது.

எதை அரசின் கைகளில் வைத்துக்கொள்வது, எதை தனியாரிடம் கொடுப்பது என்பதையெல்லாம் நாங்கள்தான் தீர்மானிப்போம். அதற்காக போராட்டம் எல்லாம் செய்யக்கூடாது. அதுவும் கேந்திரமான பாதுகாப்புத்துறையில் கூடவே கூடாது. மீறினால் அத்தியாவசிய பாதுகாப்பு சேவை அவசர சட்டம் கொண்டு வந்து போராட்டத்தை அடக்குவோம் என்று ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள். ஒன்றிய அரசின் இந்தப் போக்கை ஒருபோதும் ஏற்க மாட்டோம். எது அரசுத்துறையில் இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு எங்களுக்கு முழு உரிமை உள்ளது. நாட்டின் பாதுகாப்பு அரசின் கைகளில் மட்டுமே இருக்க வேண்டும். தனியார் கைகளுக்கு போகக்கூடாது. இதை வலியுறுத்தி நாங்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம். மீறி முடிக்க சட்டம் கொண்டு வந்தால் அதையும் எதிர்த்துப் போராடுவோம் என்று தொழிலாளி வர்க்கம் சொல்கிறது.

### சங்கம் சேரும் உரிமை

எங்கள் அரசு தொழில் செய்யும் கார்ப்பரேட்டு கம்பெனிகளுக்கு வசதி செய்து கொடுப்பதில் உலக தர வரிசையில் முன்னேறி உள்ளது. மேலும் முன்னேறுவதற்காக தொழிலாளர் நலச் சட்டங்களை எல்லாம் நீர்த்துப்போகச் செய்வோம். அமர்த்து துரத்து என்பதை நடைமுறைப்படுத்துவோம். சங்கம் சேரும் உரிமை, கூட்டுபேர உரிமை என்பதெல்லாம் அங்கீகரிக்க மாட்டோம் என்று ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள்.

நாங்கள் நெடிய போராட்டம் நடத்தி வென்றெடுத்த உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். தொழிலாளர் நலச் சட்டங்களை பலப்படுத்த வேண்டும். அனைவருக்கும் குறைந்தபட்ச மாத சம்பளம் ரூ.26,000/- உறுதிப்படுத்தப்பட

வேண்டும், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன தீமானங்கள் 87 & 97 "சங்கம் சேரும் உரிமை, கூட்டு பேர உரிமை" உடனே அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள். எல்லாவற்றையும் மீறி நீங்கள் போராட முன்வந்தால் உங்களை சாதி, மத, மொழி, இன அடிப்படையில் பிரித்தாள்வதற்கான எல்லா சதிகளையும் செய்வோம் என்று ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள். போராடும் தொழிலாளிக்கு சாதியில்லை, மதமில்லை, இனவெறி இல்லை, மொழி வெறி இல்லை, கொள்கை உண்டு, கோஷம் உண்டு. கோரிக்கைகள் வென்றெடுக்க கோடிக் கைகள் போராடும் என்று தொழிலாளர்கள் உரத்து சொல்கிறார்கள்.

### செல்வ ஆதராங்களை உருவாக்குபவர்கள் யார் ?

கார்ப்பரேட் முதலாளிகள்தாம் இந்த நாட்டின் செல்வ ஆதாரங்களை உருவாக்குபவர்கள் (Wealth Creators). எனவே அவர்களுக்கு சாதகமாகதான் அனைத்து பொருளாதார கொள்கைகளும் வகுக்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்தது.(உதாரணம் : சர்வதேச கச்சா எண்ணெயின் விலை உயராது என்று அரசு கருதியது. ஆனால் கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்ட காரணத்தால் மந்த நிலையிலிருந்த பொருளாதாரம் சூடுபிடிக்க ஆரம்பித்தது. இதனால் பெட்ரோலியப் பொருட்களின் தேவை அதிகரித்து மீண்டும் விலை உயர ஆரம்பித்தது. விரைவிலேயே பெட்ரோலியப் பொருட்களின் விலை மார்ச் மாதத்திற்கு முந்தைய விலைமையும் தாண்டி 75 டாலரைத் தொட்டது. விலை குறைந்தபோது வரியை உயர்த்திய அரசு, விலை உயர்ந்தபோது வரியை குறைத்திருக்க வேண்டும். ஆனால் அதை செய்யவில்லை. அப்படி செய்தால் மறுபடியும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரியை உயர்த்த வேண்டும். தேர்தல் நிதிக்கான பத்திரங்களில் 95 சதவீதத் தொகை பா.ஜ.க.வுக்குத்தான் சென்றிருக்கிறது. அந்த பத்திரங்களை வழங்கிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சேவகம் செய்ய வேண்டும் என்பதற்காக சாமானிய மக்களின் நலன்களை அரசு பலி கொடுக்கிறது.(மார்ச் மாதத்தில் 6 முறை பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ளது) அதற்கு ஏற்றவாறு வரவு-செலவு கணக்கை சமர்ப்பிக்கிறது. அந்த நாட்டின் கோடானு கோடி தொழிலாளர்களும், ஊழியர்களும், விவசாயிகளும்தான் செல்வ ஆதாராங்களை உருவாக்குபவர்கள். உற்பத்தியான பொருட்களின் உழைப்பை கழித்துப் பார்த்தால் மிஞ்சுவது வெறும் கச்சாப்பொருள்கள்தான். உழைப்பாளர்கள் கைப்படாமல் இந்த நாட்டில் எந்த பொருளும் உருவாகாது. எனவே அனைத்து பொருளாதாரக் கொள்கைகளும் உழைப்பாளிகளின் நலனை பாதுகாக்கும் வகையிலேயே உருவாக்கப்பட வேண்டும் என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள். (உதாரணம் :2014-2022 ஆண்டுகளுக்கிடையே பெட்ரோல் மீது கலால் வரி ரூ.1.48 லிருந்து 27.10 ஆகவும், டீசல் 3.56 லிருந்து 21.80 ஆகவும் உயர்ததப்பட்டது. இதன் மூலம் ஒன்றிய அரசு வசூல் செய்த தொகை 21.80 லட்சம் கோடி பறித்துள்ளது.)

### ஒன்றிய அரசின் கரிசனத்தால் இந்தியாவில் கோடீஸ்வரர்கள்

ஹிருன் என்ற பத்திரிகை 2021 வெளியிட்டிருக்கும் செய்தி முகேஷ் அம்பானி உலகில் பணக்காரர்களில் 9வது இடத்தில் இருக்கிறார். சொத்து மதிப்பு சுமார் 7.8 லட்சம் கோடி. ஒரே ஆண்டில் சொத்து மதிப்பு 24 சதவீதம் அதிகரிப்பு. இந்தியாவின் 2வது பணக்காரர் கவுதம் அதானி(பிரதமரின் நண்பர்) 12வது இடத்தை பிடித்துள்ளார். 2021ல் உலகில் அதிகம் சம்பாதித்தவர் அதானி. 2021ல் பாரம் 6 ஆயிரம் கோடி வருவாய் ஈட்டியுள்ளார். உலக பணக்காரர் பட்டியலில் 313வது இடத்தில் இருந்தார். ஒரே ஆண்டில் 12வது இடத்திற்கு வந்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் அதானியின் சொத்து 1830 சதவீதம்


உயர்ந்துள்ளது. தற்போதைய சொத்து மதிப்பு 81 மில்லியன் டாலர் (சுமார் 6 லட்சம் போடி) உலக பணக்கார பட்டியலில் இந்தியா 3வது இடம். ஆனால் (உலக பட்டினி நாடுகள் 116ல் இந்தியா 101வது இடத்தில் உள்ளது.) கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் 700 பில்லியன் டாலர் செரத்து சேர்த்துள்ளார்கள். இது ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜி.டி.பிக்கு நிகரானது என்று ஆய்வில் தெரிய வருகிறது. ஏழை மக்கள் ஏழை மக்களாக இருக்கிறார்கள். பணக்காரர்கள் எண்ணிக்கை இந்தியாவில் கூடிக்கொண்டே போகிறது.

கார்ப்பரேட் முதலாளிகள்தான் மூலதனம் கொண்டு வருகிறார்கள். அவர்கள்தான் பொருளாதாரத்தின் அச்சாணி. எனவே அவர்களின் நலன்தான் எங்களுக்கு முக்கியம். அதனை பாதுகாப்பதற்காகத்தான் இந்த அரசு உள்ளது என்று ஒன்றிய ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள்., தொழிலாளர்களும், விவசாயிகளும், அரசு ஊழியர்களும் இந்த நாட்டின் முதுகெலும்பு. அவர்களின் உழைப்பில்லாமல் ஓர் அணுவும் அசையாது. பெரும் முதலாளிகளின் மூலதனம் எங்கள் முன்னோர்களின் உபரி உழைப்பின் குவியல். எனவே அனைத்து சட்டங்களும் உழைப்பாளிகளின் நலனை பாதுகாக்கும் வகையில்தான் இயற்ற வேண்டும் என்று பாட்டாளிகள் சொல்கிறார்கள்.

அதேபோல் நவீன தாராளமயக் கொள்கை மூர்க்கத்தனமாக அரசு அமலாக்க முயர்ச்சித்தபோது கடந்த 30 ஆண்டுகளில் நாம் நடத்திய போராட்டத்தின் விளைவாக தேசம் பாதுகாக்கபட்டுள்ளது. இருப்பினும் தாரளமயக் கொள்கைகளை அரசு அமலாக்க மீண்டும் மீண்டும் முயற்சிக்கும். இதை தடுத்து நிறுத்த வேண்டிய தேசபக்தி கடமை இந்திய தொழிலாளி வர்க்கத்திற்கு உண்டு.

எனவே, வேலையின்மைக்கு எதிராகவும், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் பெற்றிடவும், பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு தாரைவார்க்கும் போக்கு கைவிடவும், மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் மறு சீரமைப்பு என்ற பெயரில் தனியார்மயம், ஒப்பந்தமுறை, அவுட்சோர்சிங் முறை ஒழிக்கவும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் பெற்றிடவும், மத்திய, மாநில அரசுத் துறையில் காலி பணியிடங்கள் நிரப்பிடவும், புதிய புதிய சுரண்டல் வடிவங்களுக்கு எதிராக உலக பாட்டாளி வர்க்கம் உலகெங்கிலும் இடைவிடாதப் போராட்டங்கள் விரிவுப்படுத்திக் கொண்டு வருகிறது. ஒரு பகுதியாக உலக முதலாளித்துவத்திற்கு எதிரான உலக தொழிலாளி வர்க்கம், மகத்தான யுத்ததின் ஒரு பகுதிதான் மார்ச் 28,29 இரண்டு நாள் இந்திய தேசமே ஆர்தெழுந்த வேலை நிறுத்தப் போராட்டம். இந்த பொது வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மகத்தான பங்கெடுத்துள்ளது.

ஒன்றிய அரசு பல்வேறு அடக்கு முறைகளை தொடர்ந்தது. அதையெல்லாம் எதிர்கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இந்த தேசம் காக்கும் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு ஒன்றிய அரசின் ஊழியர் விரோத, மக்கள் விரோத போக்கினை விரிவான முறையில் ஊழியர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை மிக எழுச்சியோடு, மிகச் சிறப்பாக செய்த மாவட்ட, வட்ட, முன்னணி ஊழியர்கள் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளார்கள். அனைத்து தோழர்களுக்கும் செவ்வணக்கத்தை தொவித்து இந்த தேசம் காக்கும் போராட்டத்தில் பங்கு பெற்று இந்த அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றி அடையச் செய்துள்ளனர். தொடர்ந்து போராட்டம் நடத்துவோம், உழைக்கும் மக்களின் போராட்டங்களே இறுதி வெற்றி பெறும். இதுவே உலக அனுபவம். ●



## ஏப்ரல் 14
## டாக்டர். பி.ஆர்.அம்பேத்கரின் பிறந்த நாள்

# இந்தியாவில் சாதிகள்
### நூலில் இருந்து

நாம் நன்கு அறிந்த மானுடவியல் அறிஞர்களின் கூற்றுப்படி ஆரியர்கள், திராவிடர்கள், மங்கோலியர்கள், சித்தியர்கள் ஆகியோர் அடங்கிய கலவையே இந்திய மக்கள் ஆவர். இவர்கள் அனைவரும் பன்னெடுங் காலத்திற்கு முன்னர் பல்வேறு திசைகளிலிருந்தும் பல வகைப்பட்ட பண்பாடுகளோடும் இந்தியாவுக்குள் நுழைந்த பழங்குடிகளாவர். இவர்கள் அனைவரும் தங்களுக்கு முன்பே இங்கு வாழ்ந்து வந்தோருடன் போரிட்டுத் தங்கள் வருகையை உறுதிப்படுத்திக் கொண்டனர். இதைத் தொடர்ந்து வந்த போராட்டங்களுக்குப் பின் நிலையாகத் தங்கிப் பிறருடன் அண்டை அயலாராகி அமைதியாக வாழத் தொடங்கினர். பின்னர் இவர்களுக்குள் தொடர்ந்து ஏற்பட்ட தொடர்பின் மூலமாகவும் கலந்து பழகியதாலும் தத்தம் தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டினை இழந்து அவர்களுக்குள் ஒரு பொதுப் பண்பாடு உருவானது. எனினும் பலவகை இன மக்களின் தனித்தனிப் பண்பாடு மறைந்து ஒன்றுபட்ட ஒரே பண்பாடு ஏற்பட்டு விடவில்லை என்பதும் தெளிவு. இதனால் இந்திய நாட்டு எல்லைக்குள் பயணம் செய்யும் பயணி ஒருவர் இந்தியாவின் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள மக்கள், உடலமைப்பிலும் நிறத்திலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம்; அவ்வாறே தெற்கிலும் வடக்கிலும் உள்ள மக்களிடையேயும் வேறுபாடு இருக்கக் காணலாம். இனங்களின் கலப்பு என்பது எப்போதும் ஒரே இயல்புள்ளதாக இருக்கவேண்டும் என்று ஆகாது. மானுடவியல் படி மக்கள் யாவரும் பலபடித்தான (hetrogeneous) தன்மை கொண்டவர்களே. அந்த மக்களிடையே நிலவும் பண்பாட்டு ஒருமையே ஓரியல்புத் தன்மைக்கு அடிப்படையாகும். பண்பாட்டு ஒருமைப்பாட்டினால் இணைந்துள்ள இந்தியத் தீபகற்பத்திற்கு இணையாக ஒப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு வேறு எந்த நாடும் இல்லை என்று துணிந்து கூறுவேன். இந்திய நாடு புவியியல் ஒருமைப்பாட்டினை மட்டுமே கொண்டிருக்கவில்லை. அதனினும் ஆழமும் அடிப்படையாகவும் உள்ளதான இந்திய நாடு முழுவதையும் தழுவிய

ஐயத்திற்கு இடமற்ற பண்பாட்டு ஒருமைப்பாட்டினைக் கொண்டுள்ளது. இந்த ஒத்த இயல்பின் காரணமாகவே சாதி என்பது விளக்கவுரைக்கு இயலாத சிக்கலாக உள்ளது. இந்து சமுதாயம் என்பது ஒன்றுக்கொன்று தனித்தனியே இயங்கும் பிரிவுகளின் ஒரே கூட்டமைப்பாக மட்டும் இருக்குமேயானால் இந்தச் சிக்கல் எளிதானதாக இருக்கும். ஆனால் சாதி ஏற்கனவே ஓரியல்பாய் உள்ள பிரிவுகளின் கூட்டமைப்பாக உள்ளதால் சாதியின் தோற்றத்தைப் பற்றி விளக்குவது கூட்டமைப்பாக அமைந்த முறையினை விளக்குவதாக ஆகின்றது.)

சாதியின் பல்வேறு இயல்புகளை ஆய்ந்து சரியாக மதிப்பிட்டு உரைப்பதானால், அகமணம் அல்லது தன் இனத்திற்குள்ளேயே மணம் செய்து கொள்ளும் வழக்கமே சாதியின் அடிப்படையான ஒரே இயல்பு எனக் கூறலாம். அதாவது, கலப்பு மணமின்மையோ அல்லது கலப்பு மணத் தடையோ சாதியின் சாராம்சமாகும். ஆனால் சாதி என்னும் பிரச்சினைக்கு இடமில்லாத வகையில் அக மணக் குழுவினர் இருப்பதைக் கொண்டு நுட்பமான மானுடவியல் அடிப்படையில் இக்கூற்றினை மறுக்கலாம். அகமணப் பழக்கம் உள்ளவையாக உள்ள இத்தகைய சமூகக் குழுக்கள் ஏறத்தாழ இடப்பெயர்வு பெற்ற இடங்களில் தம் உறைவிடங்களை அமைத்துக் கொண்டவையாகவும், ஒன்றுக்கொன்று சிறிதும் தொடர்பு இல்லாதவையாகவும் இருப்பதைக் காணலாம். இந்தப் போக்கிற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் உள்ள நீக்ரோக்களையும், வெள்ளையர்களையும், அமெரிக்க இந்தியர்கள் எனப்படும் பல்வேறு பழங்குடியினரையும் கூறலாம். இந்தியாவில் உள்ள நிலைமை வேறு விதமானதாகையால், இந்தச் சிக்கலைக் குழப்பிக் கொள்ளக்கூடாது. ஏற்கெனவே குறிப்பிட்டவாறு இந்திய மக்கள் ஓரியல்பான முழுமையினராவர். இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ள பல்வேறு இனத்தவரான இந்திய மக்கள். அநேகமாக ஒன்று கலந்து ஓரியல்புத் தன்மையுற்ற பண்பாட்டு ஒருமையை அடைந்துள்ளனர். அகமணச் சமூக அல்லது கணவழியிலான நெருங்கிய உறவினால் அமைந்த சமூக அல்லது பழங்குடியினரிடம் காணப்படாத இயல்பினைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, ஓரியல்புத் தன்மையுள்ள பண்பாட்டு ஒருமையை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இந்திய மக்களிடம் நிலவும் சாதிச் சிக்கல் புதுமையான தன்மையுள்ளதாக ஆகின்றது. இந்தியாவில் சாதி என்பது மக்களைச் செயற்கையாகக் கூறுபடுத்திப் பிரித்து அகமணம் புரியும் வழக்கத்தால் ஒன்று, மற்றொன்றோடு இணைதலிலிருந்து தடுத்து வரையறுக்கப்பட்ட பிரிவுகளாக ஆக்கியுள்ளது என்பதே இதன் பொருள். சுருங்கச் சொன்னால், சாதி முறைக்குத் தன் இனத் திருமண வழக்கம் அல்லது அகமண வழக்கமே தனித்தன்மை வாய்ந்த ஒரே இயல்பு என்னும் முடிவு தவிர்க்க முடியாததாகிறது. ஆகையால், அகமண வழக்கம் எவ்வாறு கட்டிக் காப்பாற்றப்படுகிறது என்பதை நிறுவுவதில் நாம் வெற்றி பெற்றால் சாதியின் பிறப்பையும் அமைப்பியக்கத்தையும் சரியாக நிரூபித்தவர்களாவோம். சாதியமைப்பு என்னும் மர்மப் பேழையைத் திறப்பதற்குரிய திறவுகோலாக நான் ஏன் அகமண வழக்கத்தைக் குறிப்பிடுகின்றேன் என்பதை நீங்கள் யூகிப்பது அவ்வளவு எளிதாக இருக்காதாகையால் நீங்கள் உளைச்சல் அடையாமல் இருப்பதற்காக என்னுடைய காரணங்களை முன்வைக்க விழைகின்றேன்.

இந்தியச் சமுதாயத்தைத் தவிர வேறு எந்த நாகரிக சமுதாயத்திலும் நாகரிகமற்றிருந்த பழங்காலத்திற்குரிய மிச்ச சொச்ச சின்னங்கள் நிலவி வருவதைக் காணமுடியாது என்பதையும் இந்தத் தருணத்தில் வலியுறுத்துவது முற்றிலும் ஏற்றதென்றே கருதுகின்றேன். இங்குள்ள மதங்கள் நாகரிகத் தொடக்க காலத்தன்மையுடையன. காலச் சுழற்சியாலும், நாகரிக வளர்ச்சியாலும், பாதிக்கப்படாதவையாய் அதன் பழங்குடிச் சமுதாயச் சட்ட திட்டங்கள் பழமை வீரியத்துடன் இன்றளவும் இயங்கி வருகின்றன. பழங்காலத்துப் பழக்கவழக்கங்களில் எச்சமாக மிஞ்சியவற்றுள் ஒன்றான புற மண வழக்கம் தொடக்ககாலச் சமுதாயங்களில் பரவலாக நிலவியது என்னும் உண்மை நீங்கள் யாவரும் நன்கறிந்ததாகும். புறமண வழக்கம் காலப்போக்கில் தன் தெம்பையும் திறனையும் இழந்தது. நெருங்கிய இரத்த உறவு கொண்டவர்களைத் தவிர பிறருடைய திருமணத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கும் சமுதாயத் தடைகள் எதுவும் இப்போது இல்லை. ஆயின், இந்திய மக்களைப் பொறுத்த மட்டில் புறமண விதி என்பது இன்றுங்கூட உறுதியான தடையாக உள்ளது. இந்தியாவில் கணங்கள் (Clan) ஏதும் இல்லாத போதும் கூட, கண அமைப்பின் சாராம்சங்களையே மையமாகக் கொண்ட திருமண விதிமுறையிலிருந்து இதை எளிதில் புரிந்து கொள்ளலாம். இதன் விளைவாக சபின்தாஸ்' அதாவது ஒரே இரத்த உறவு உள்ளவர்கள் திருமண உறவு கொள்ளக் கூடாது என்றில்லாததோடு சகோத்ராஸ்' எனப்படும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையே நடக்கும் திருமணம் அவச் செயலாகக் கருதப்படுகின்றது.

எனவே, அகமண முறை என்பது இந்தியர்களுக்கு அந்நியமானது என்ற உண்மையை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். இந்தியாவின் பல்வேறு கோத்திரங்களும் புறமண வழக்கத்தைக் கொண்டவைதான். குறியீடுகளைக் குலமரபுச் சின்னங்களாகக் கொண்ட குழுக்களும் (totemic) இத்தன்மையனவே. இந்திய மக்களைப் பொறுத்தமட்டில் புறமணம் என்பது எவரும் மீளத் துணியாத ஒரு சமயக் கோட்பாடாகவே உள்ளது. இந்த இயல்பின் காரணமாக, சாதிகளுக்குள் அகமண வழக்கம் கடைப்பிடிக்கப்பட்ட போதிலும் சாதிகளின் தன்னின மக்களுக்குள்ளே புறமணம் என்பது எவரும் மீறத் துணியாத ஒரு சமயக் கோட்பாடாகவே உள்ளது. மேலும் அகமண வழக்கத்தை மீறியதற்காக விதிக்கப்படும் தண்டங்கள் புறமண வழக்கத்தை மீறியதற்காக விதிக்கப்படும் தண்டங்களை விட மிகக் கடுமையானவை. புறமணம் என்றாலே கலந்து ஒன்றாவது என ஆகின்றது. இதனால் புற மணத்தின் விளைவாகச் சாதி என்பது இருக்க இயலாது என்பதை அறிவீர்கள்.

ஆனால் நம்மிடையே சாதிகள் உள்ளனவே; இது எதனால்? ஆய்ந்து பார்த்தோமானால் இந்தியாவைப் பொறுத்த மட்டில் சாதிகளின் படைப்பு என்பது புறமணத்தை விட அகமணத்திற்கு உயர்வான இடம் அளிக்கப்பட்டதன் விளைவு என்பது புலப்படும். எனினும், வழக்கமாகப் புறமணம் செய்து வந்த கூட்டத்தார் மீது தன் இனத்திற்குள்ளேயே மணம் புரியும் அகமண வழக்கத்தைப் புகுத்தியது சாதியைப் படைப்பதற்கு இணையான செயலாக அமைந்துவிட்டது. இதுவே, துயரார்ந்த பிரச்சினையாகும். புறமண வழக்கத்திற்கு எதிராக அகமண வழக்கத்தைக் கட்டிப் காப்பதற்காகப் பின்பற்றியுள்ள வழிமுறைகளை ஆழ்ந்து

நோக்குவதால் நம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும் என நாம் நம்பலாம்.

இவ்வாறு புறமணத்தைவிட அகமணத்திற்கு உயர்வான இடம் அளிக்கப்பட்டிருப்பதே சாதியின் தோற்றமாயிற்று. எனினும் இது அவ்வளவு எளிதான நிகழ்ச்சி அல்ல. தன்னைத் தானே ஒரு சாதியாக ஆக்கிக் கொள்ள விரும்பும் ஒரு கற்பனைக் குழுவை எடுத்துக் கொண்டு அகமணப் பழக்கத்தை மேற்கொள்ளுவதற்கு அக்குழு கையாளக் கூடிய வழிமுறைகளை ஆய்வோம். ஒரு குழுவினர் தங்களுக்குள் அகமணப் பழக்கத்தை மேற்கொள்ள விரும்பினால் அந்நியக் குழுவினருடனான கலப்பு மணத்திற்குத் தடை விதிப்பதனால் மட்டும் பயன் ஏற்படாது. குறிப்பாக, அகமணப் பழக்கம் புகுத்துவதற்கு முன் புற மணமே மணவுறவுகளில் ஒரு விதியாக பின்பற்றப்பட்டிருக்குமாயின் மேற்கூறிய தடையினால் பயனேதும் இல்லை என்பது தெளிவு. மேலும் ஒன்றோடொன்று மிக நெருக்கமான தொடர்புடைய எல்லாக் குழுக்களிலும் ஒன்று பிரிதொன்றைப் போல இருக்கவும், இணைந்து கலப்புற்று ஒரே மாதிரியான சமூகமாக சேர்கின்ற போக்கும் உள்ளது. சாதிமுறை உருவாவதைக் கருதி இந்தப் போக்கினை வன்மையாகத் தடுக்க வேண்டுமானால், ஒரு குறுகிய வட்ட வரம்புக்கு வெளியே சென்று மக்கள் மணவுறவுகளை வைத்துக்கொள்ளக் கூடாது என வரையறுக்க வேண்டியதாகின்றது.

எனினும், வெளியாருடன் மணவுறவு கொள்வதைத் தடுப்பதற்கு விதிக்கும் இந்தத் தடை அல்லது எல்லைக் கட்டு, எளிதில் தீர்க்க முடியாத பிரச்சினைகளை உள்ளுக்குள்ளேயே உருவாக்கி விடுகின்றது. மேலெழுந்த வாரியாகச் சொன்னால், சாதாரணமாக ஒரு குழுவில் ஆண், பெண் இரு பாலரும் சம எண்ணிக்கையில் இருப்பர்; பொதுவாகச் சம வயதிலும் இருப்பர்; ஆனால் பல சமூகத்தினரிடையே இந்தச் சமநிலை சரியாக உணரப்படுவது இல்லை . அதே நேரத்தில் தன்னைத் தானே ஒரு சாதியாக உருவாக்கிக் கொள்ள விரும்புகின்ற குழுவிற்கு ஆண், பெண் ஆகியோருக்கிடையே சம நிலைகளைப் பேணுவது முடிவான நோக்கமாக ஏற்பட்டு விடுகின்றது. இவ்வாறு இருபாலரும் சம எண்ணிக்கையில் இல்லாமற் போனால் அகமண வழக்கம் அழிந்து போகும். அதாவது, அகமண வழக்கத்தை கட்டிக் காக்க வேண்டுமானால் இல்லற வாழ்க்கைக்கான அல்லது மணவுறவுகளுக்கான உரிமைகள் குழுவுக்குள் இருந்தே அளிக்கப்படவேண்டும். இல்லையெனில் குழுவின் உறுப்பினர்கள் தங்கள் வட்டத்தை விட்டு வெளியேறித் தங்களால் முடிந்த வழிகளிலெல்லாம் தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்ள முனைவார்கள். ஆகவே, திருமண உரிமைகள் குழுவுக்குள்ளிருந்தே அளிக்கப்பட வேண்டுமென்றால், தம்மைத் தாமே ஒரு சாதியாக ஆக்கிக் கொள்ள விரும்பும் குழுவினர் திருமணத்திற்கேற்ற ஆண்கள், பெண்கள் ஆகியோரின் எண்ணிக்கை சமஅளவினதாக இருக்குமாறு பேணுவது அவசியமாகின்றது. இதுபோன்ற ஒத்த எண்ணிக்கைச் சமநிலையைப் பேணுவதன் மூலமே, அகமண வழக்கத்தைக் கட்டிக் காக்க முடியும். ஆண், பெண், எண்ணிக்கையில் ஏற்படும் பெரிய ஏற்றத்தாழ்வு அகமண வழக்கத்தை நிச்சயமாகத் தகர்த்து விடும்.

ஆக, சாதிச் சிக்கல் என்பது, தம் குழுவிற்குள் இருக்கும் மண வயதுடைய ஆண், பெண் இருபாலருக்கிடையிலான சமமின்மையை ஒழுங்குபடுத்துவதைச்

சுற்றியே சுழல்கின்றது எனலாம். ஆண், பெண் எண்ணிக்கை அளவு எப்போதும் சமமாக இருக்க வேண்டுமானால் இயற்கையில் ஆண், பெண்ணாக இருக்கும் கணவனும், மனைவியும் மரணத்தின் போது ஒரேகாலத்தில் இறக்கவேண்டும். ஆனால் இது எப்போதாவது நடக்கக் கூடியதொரு நிகழ்ச்சியாகத்தான் இருக்க முடியுமேயொழிய எப்போதும் நடக்க முடியாத ஒன்றாகும். மனைவிக்கு முன் கணவன் இறக்கலாம்; அதனால் ஆண்களை விட ஒரு பெண் எண்ணிக்கையில் அதிகமாகிறாள். இந்தக் கூடுதலாக உள்ள பெண்ணுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும். இல்லையெனில் அவள் தன் இன ஒழுக்கத்தை மீறிக் கலப்பு மணம் செய்து கொண்டு அவளது குழுவின் அகமணப் பழக்கத்தைச் சீர்குலைப்பாள். அவ்வாறே, மனைவியை இழந்த கணவன் கூடுதல் ஆண் ஆகின்றான். அவன் தன் மனைவியை இழந்ததற்காகச் சமுதாயம் அனுதாபப்படலாம். ஆயினும் அவனால் ஏற்படும் ஒரு ஆண் எண்ணிக்கைக் கூடுதலைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் அவன் தன் சாதிக்கு வெளியே திருமணம் செய்து கொண்டு அகமண வழக்கத்தைத் தகர்ப்பான். எனவே, ஆண், பெண் எண்ணிக்கைகளில் கவனம் செலுத்தி அவர்களுக்கு அந்தந்த குழுக்களுக்குள்ளிருந்தே வாழ்க்கைத் துணைவர்களைத் தேடி அளிக்காவிட்டால் அவர்கள் தடுக்கப்பட்ட எல்லைகளைத் தாண்டித் திருமணம் செய்து கொண்டு சாதிக்கு அந்நியமான பிள்ளைகளைப் பெற்றளிக்கக் கூடியவர்களாகி விடுவார்கள். ●



தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க 15 ஆம் மாநில மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட மாநில நிர்வாகிகளுக்கு வாழ்த்துகள்.


தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்
மாநில மையம், பதிவு எண்: 53/89 - 1985

ஆர்.கலா
மாநிலத் தலைவர்


எம்.ஆர்.திலகவதி
மாநிலப் பொருளாளர்

அ.மலர்விழி
பொதுச்செயலாளர்

மாநில துணைத் தலைவர்கள்:
அ.நூர்ஜஹான், பே.பேயத்தேவன், ஆ.பெரியசாமி, கே.அண்ணாதுரை, மு.தமிழரசன், ஆர்.எம்.மஞ்சுளா, கே.சுபந்தி

மாநிலச் செயலாளர்கள்:
எஸ்.கற்பகம், எஸ்.சுமதி, பெ.மகேஸ்வரி, எஸ்.பாண்டிச்செல்வி, அ.லதா, ஜெ.நிர்மலா, ஏ.மிக்கேலம்மாள்

# தோழர் வி.பி.சிந்தனின் தியாக வாழ்வு



- பெரணமல்லூர் சேகரன்

வி.பி.சி என்று தமிழகத்தின் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களாலும், இளைஞர்களாலும், மாணவர்களாலும் அன்புடன் நினைவு கூரப்படும் தோழர் வி.பி. சிந்தன் அவர்கள் இந்திய புரட்சிகர இயக்கத்தில் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.1939 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் வி.பி.சிந்தன் இணைந்தார். அப்போது அவருக்கு வயது 21. அதிலிருந்து தமிழக உழைக்கும் மக்களின் லட்சியத்துக்காக ஓய்வு ஒழிச்சல் இன்றி வீரம்செறிந்த போராட்டங்கள் நடத்துவதாகவே அவரது வாழ்க்கை அமைந்தது. தொழிலாளர்களுக்கும், பள்ளி-கல்லூரி மாணவ, மாணவியர்க்கும் அரசியல் ரீதியான, தத்துவார்த்த ரீதியான போதனை செய்வதை தனது அரசியல் வாழ்க்கையின் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தார். ஏராளமான இயக்கப் பணிகளுக்கு இடையிலும் தினமும் படிப்பதற்கும் நேரத்தை ஒதுக்கினார். சுயவிமர்சனம் உள்பட, விமர்சனம் செய்யும் உரிமையை இயக்கத்தில் கறாராக மேற்கொண்டவர். அவர் திடமான மனிதர். உழைக்கும் மக்களின் லட்சியத்திற்கு முழுவிசுவாசமாக இருந்தார். அவருடைய இத்தகைய குணங்கள் தான் புரட்சிகர இயக்கத்தின் எதிரிகளிடமிருந்து வந்த கடுமையான ஒடுக்குமுறைகளையும், பெரும் ஆபத்துக்களையும் எதிர்த்து நிற்கும் உறுதியை அவருக்கு அளித்தன.விஞ்ஞான தத்துவத்தின் வளர்ச்சியில் ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருந்தவர். அவர் தொழிற்சங்க இயக்கத்தில் முன்னணி கள வீரராகவும், தலைவராகவும் திகழ்ந்தவர். அதே சமயத்தில் தத்துவத்தில், சமூகவியலில், வரலாற்றில், இலக்கியத்தில் அவர் ஈடுபாடு கொண்டிருந்தார். அவற்றை ஆழமாக அறிந்துகொள்வதோடு மட்டுமின்றி அவற்றை சமூக மாற்றத்திற்கான போராட்டத்தில் இணைப்பதிலும் அக்கரை செலுத்தியவர். 1942ல் கட்சி கட்டளைக்கிணங்க சென்னைக்கு வந்தார். 1943லிருந்து சென்னையில் தொழிற்சங்க பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். அன்று முதல் சென்னை மாநகர தொழிலாளர்களின் பாசமிகு தலைவராக விளங்கினார்.1946ல் விடுதலைப் போராட்டத்தில் தனி முத்திரை பதித்த கப்பற்படை எழுச்சிக்கு ஆதரவாக தொழிலாளர்களைத் திரட்டினார் வி.பி.சி.

பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து பாண்டிச்சேரி விடுதலை அடைய நடந்த போராட்டங்களில் தோழர் வி.பி.சி, மேஜர் ஜெய்பால் சிங்குடன் இணைந்து பணியாற்றினார். அதேபோன்று போர்ச்சுகீசியர் ஆதிக்கத்திலிருந்த கோவா விடுதலைக்கு தொண்டர்களைத் தயார் செய்து அனுப்பி வைப்பதில் பெரும் பங்காற்றினார். 1967-71 காலகட்டங்களில் கடும் அடக்குமுறைகளை - தாக்குதல்களை தொழிற்சங்க இயக்கம் சந்தித்தது. அப்போது அடக்குமுறைக்கு எதிராக நடைபெற்ற எண்ணற்ற போராட்டங்களுக்குத் தலைமையேற்று அடக்குமுறைகளைத் துணிச்சலாக எதிர்கொண்டவர்.1968ல் மாணவர் - போக்குவரத்து தொழிலாளர்க்கு இடையே நடந்த மோதலில் சையத் உமர் என்ற டிரைவர் தாக்கப்பட்டு உயிர் நீத்தார். அவரது சவ ஊர்வலப் பாதையை மாற்றி பெரும் கலவரம் ஏற்படுத்த தீவிரவாதிகள் முயற்சித்தனர். அதைத் தடுக்கும் வகையில் தோழர் வி.பி.சி, ஊர்வல முகப்பில் நின்றுகொண்டு 'ஊர்வலப் பாதையை மாற்ற விரும்புவோர் யாராக இருந்தாலும் என்னைக் கொன்ற பிறகு என் பிணத்தின் மீதுதான் நடந்துபோக வேண்டும்' என ஓங்கி குரல் எழுப்பியதன் விளைவாக பெரும் கலவரம் தடுக்கப்பட்டது.1972ல் எம். ஆர்.எப் தொழிலாளர் போராட்டம்

நடைபெற்றது. போராட்டத்தையொட்டி வி.பி.சி, குசேலர், கே.எம்.அரிபட், பி.ஆர். பரமேஸ்வரன் ஆகிய தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். தோழர் பி.ராமமூர்த்தி அவர்கள் நான்கு தோழர்களுக்கு ஆதரவாக உயர்நீதிமன்றத்தில், வழக்கு தொடுத்து அவரே வழக்கில் ஆஜராகி பெற்றுத் தந்தார். 1973ல் மாதவரம் பால்பண்ணை தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நடைபெறும் ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவதற்காக டவுன் பஸ் மூலம் மூலக்கடை வழியாக பயணித்தபோது மூலக்கடையில் சமூக விரோதிகளால் கத்திக் குத்துக்கு ஆளானார். சம்பவத்தின் போது சமூக விரோதிகள் அவரைத் தடியால் தாக்கியது மட்டுமல்ல, கத்தியால் மாறி மாறி குத்தினார்கள். வி.பி.சி தனது மனவலிமையால் அத்தனை தாக்குதலையும் தாங்கிக் கொண்டார். இறந்துவிட்டார் என கருதிதான் சமூக விரோதிகள் அந்த இடத்தை விட்டுச் செல்கின்றனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, ஒருமாத சிகிச்சைக்கு பின் உடல் தேறிய வி.பி.சியை வரவேற்க ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். வி.பி.சியின் நெஞ்சம் நெகிழ்ந்து இரண்டே வரிகள் தான் அந்த கூட்டத்தில் பேசினார். "தோழர்களே, அதிக நேரம் பேச முடியாமல் இருக்கிறேன். ஏராளமான இரத்தம் சிந்தப்பட்டதால் நான் மிகவும் பலவீனமாக இருக்கிறேன். மிச்சமிருக்கும் ரத்தமும், சதையும் உங்களுக்காகத் தான்" என கூறியபோது கூட்டத்திற்கு வந்திருந்த ஆயிரக்கணக்காண உழைப்பாளி மக்கள் கரவொலி எழுப்பிக்கொண்டே கண்ணீர் சிந்திய காட்சி பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க செய்தது. இன்றைய தொழிற்சங்க இயக்கங்களில் போக்குவரத்து சம்மேளனம் வலுவாக செயல்படுவதற்கு வி.பி.சி எவ்வாறு காரணமோ அதே போன்று மின் ஊழியர் மத்திய அமைப்பை உருவாக்கவும் வி.பி.சி பாடுபட்டார். தொழிலாளர்களுடைய தவறை எவ்வித தயக்கமின்றி தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்ட வேண்டும்; அவர்கள் கோபமடைந்து விடுவார்கள் என பயப்படக்கூடாது என்று வி.பி.சி. கூறுவார். தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்காகப் போராடுவது மட்டுமின்றி தொழிலாளர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துரைப்பார். உதாரணமாக மக்களிடம் போக்குவரத்து ஊழியர்கள் அனுசரணையாக பழகவேண்டும், முறையாக பேச வேண்டும் என்று கூறுவார்.

தோழர் வி.பி.சி மனிதர்களை ஈர்த்த ஒரு காந்த சக்தி. வி.பி.சி தனது கம்யூனிச இயக்க வாழ்வில் ஏராளமானோரை கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் கொண்டுவந்தார். தமிழக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தலைமை தாங்கும் தலைவர்களில் பலரை அவர் உருவாக்கினார். 1984ம் ஆண்டில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் வி.பி.சி வில்லிவாக்கம் தொகுதியில் மகத்தான வெற்றிபெற்றார். சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவுடன், இரவு பகல் பாராமல் தொகுதி மக்களின் தேவைகளுக்காக களத்தில் இறங்கி பணியாற்றியதை யாராலும் மறக்க முடியாது. 1987ம் ஆண்டு மாஸ்கோ பாரம்பரிய மேதின அணிவகுப்பைப் பார்வையிடவும், இந்திய-சோவியத் தொழிற்சங்கங்களிடையே உறவை மேலும் பலப்படுத்த சிஐடியுவும் இதர சங்கங்களும் ஒரு தூதுக்குழுவை அனுப்ப வேண்டும் என்று சோவியத் தொழிற்சங்கம் கேட்டுக்கொண்டது. அதன் அடிப்படையில் சிஐடியு அகில இந்திய மையம் தோழர் வி.பி.சி அவர்களை மாஸ்கோவிற்கு அனுப்பி வைத்தது. மாஸ்கோ சென்ற வி.பி.சி., மேதின அணிவகுப்பைப் பார்வையிட்டார். பிறகு 3ந்தேதி முதல் 5ந்தேதி வரை நடைபெற்ற சர்வதேச விஞ்ஞானப்பூர்வ சோசலிச மாநாட்டில் 'அக்டோபர் புரட்சியும், வளர்முக நாடுகளின் மீது அதன் தாக்கமும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். மே 7ந்தேதி வரலாற்று பிரசித்திபெற்ற ஸ்டாலின் கிராடு நகரத்தில் உள்ள யுத்த வீரர்களின் நினைவிடத்திற்குச் சென்று பார்வையிட்டார். மே 8ஆம் தேதியன்று அவருக்குக் கடும் மாரடைப்பு ஏற்பட்டது. தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் பயனின்றி போனது. அன்று இரவு 8 மணிக்குக் காலமானார். தமிழக தொழிலாளர் வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவர் தோழர் வி.பி.சிந்தன் அவர்களின் தியாக வாழ்வின் தடம் பற்றிப் பயணிக்க வேண்டியது தொழிலாளி வர்க்கத்தின் தலையாய கடமை. ●

# கனவுத் தொழிற்சாலை

- ஆர்.நடராஜன்

மன்னரின் தொழிற்சாலையில்
மிகை நேரப்பணிகள்.

உண்மைகளை பிரித்தொதுக்கி
புதிய வார்ப்படங்களில்
அலங்கார மாய பிம்பங்கள்.

மருத்துவ, சுகாதார தேவைகளுக்கு
அகல்விளக்கும், மெழுகுவர்த்தியும்
தனிப்பிரிவில் தயார் நிலை....

நவீன தொழில்நுட்பத்தில்
விலங்கின் சிறுநீரும்,கழிவும்
பதப்படுத்த தனிப்பிரிவு.......

பசும்பாலில் இருந்து தங்கத்தை
பிரித்தெடுக்க.....

புனைவுக்கதைகளில் பறந்த
புஷ்பக விமானங்களை
வடிவமைக்க......

மனித உடலில் மதயானையின்
தலை பொருத்தும் நுண் அறுவை
சிகிச்சை என.....

ஏராள அறிவியல் பிரிவுகள்
ஓய்வின்றி இயங்கி
மக்களுக்கு சுகமளிக்கிறது.

அவ்வப்போது தொழிற்சாலைக்கு
வேலைக்கும்
ஆளெடுக்கப்படுகிறது.
பக்கோடா சுடுவதற்கு!

மேகம் சூழ்ந்த காலத்தில்
எதிரி நாட்டின் ரேடார்
செயலிழக்கும் நுட்பமறிந்து
துல்லியத் தாக்குதல் நடத்தும்
போர் அறிவுப் பயிற்சியும் உண்டு.

இன்னும்

ஒரே மொழி
ஒரே உணவு
ஒரே உடை
ஒரே கல்வி
ஒரே தேர்தல்

என
ஒரே உலையில் தயாரித்து
ஒரே கரண்டியில்
மக்களுக்கு
பரிமாற தயார்நிலையில்
தொழிற்சாலை ஓய்வின்றி
இயங்குகிறது.

இயந்திரத்தில் ஏதாவது
கோளாறென்றால்
முப்பாட்டன் பெயரைக் சொல்லி
பழுதுக்கு காரணமாக்கி
தப்பிக்கவும் தெரியும்.....

ஒரே ஒரு சிக்கல்தான்!

மன்னரின் தொழிற்சாலையை
மக்கள் நம்ப வேண்டும்.



# மக்கள் சேவையில் LIC

- இரா.மங்கள் பாண்டியன்

இன்று எல்ஐசியில் 40 கோடிக்கு மேல் பாலிசிதாரர்கள் இருக்கிறார்கள். மக்கள் தொகை கணக்கீட்டின்படி பார்த்தால், உலக அளவில் எல்ஐசி பாலிசிதாரர்களை ஒரு நாடாக நினைக்கும் பட்சத்தில், 3-வது பெரிய நாடாக விளங்கும். அப்படியொரு பாரம்பரியம் கொண்ட நிறுவனத்தின் நம்பகத்தன்மையை மத்திய அரசின் பங்கு விற்பனை முடிவு குலைத்துவிடுமோ என்ற பயம்தான் இப்போது எல்லோருடைய மனதிலும் எழுந்திருக்கிறது. 1956-ஆம் ஆண்டு நேரு பிரதமராக இருந்தபோது தனியார் காப்பீட்டு நிறுவனங்களை நாட்டுடமையாக்கி "எல்ஐசி" எனும் பொதுத்துறை நிறுவனம் உருவாக்கப்பட்டது. அப்போது சில நிபந்தனைகள் வகுக்கப்பட்டன. எல்ஐசியில் வரும் லாபத்தில் 95 சதவீதத்தை மக்களுக்கு திருப்பித் தர வேண்டும், 5 சதவீதத்தை மத்திய அரசு கொடுக்க வேண்டும். அன்றிலிருந்து இன்றுவரை எல்ஐசி இதைப் பின்பற்றி வருகிறது. அப்போது மத்திய அரசு மூலதனமாக எல்ஐசிக்கு ரூ.5கோடி வழங்கியது. இன்று எல்ஐசியின் மதிப்பு ரூ.30 லட்சம் கோடிக்கும் மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தியாவில் எந்தவொரு நிறுவனத்தின் மதிப்பும் எல்ஐசியை நெருங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. இத்தகைய பெருமை வாய்ந்த அரசு நிறுவனத்தை ஏன் பங்கு விற்பனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்?

மக்களுக்கு மட்டுமல்ல இந்தியப் பொருளாதாரத்துக்கும் எல்ஐசி மிக முக்கிய பங்காற்றியிருக்கிறது. எல்ஐசி திரட்டும் நிதியினை 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை நாட்டின் கட்டமைப்பு வளர்ச்சி பணிகளிலும் முதலீடு செய்துவருகிறது. ஒவ்வொரு ஆண்டும் எல்ஐசி நிறுவனம் நாட்டின் வளர்ச்சிக்காக உதவி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டு மத்திய அரசுக்கு 3 ஆயிரம் கோடி நிதி வழங்கி உள்ளது. எல்ஐசி நல்ல முதலீட்டாளராகவும் இருந்துள்ளது. மக்களின் பணத்தை சரியான பங்குகளில் முதலீடு செய்து - நல்ல வருமானம் ஈட்டி லாபகரமான நிறுவனமாகத் தொடர்ந்து இருந்துவருகிறது. பல சமயங்களில் எல்ஐசி பணத்தை எடுத்து பொதுத் துறை வங்கிகளையும் நிறுவனங்களையும் மீட்கும் நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதும் இங்கே கவனிக்க வேண்டும். பல நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்து நிறுவனங்களின் நிதிநிலை மோசமாகாமல் இருக்கவும் இது உதவியாக இருந்துள்ளது. எல்ஐசி இந்தியப் பங்குச் சந்தையில் 2019-2020 நிதி ஆண்டில் ரூ.72 ஆயிரம் கோடி முதலீடு செய்துள்ளது. இது அந்நிய முதலீட்டாளர்கள் செய்த முதலீட்டை (ரூ.65000 கோடி) காட்டிலும் அதிகம். பங்குச் சந்தையை நிலையாக வைத்திருக்க பலமுறை அரசு எல்ஐசியை பயன்படுத்தியிருக்கிறது. 2012-ல் அரசு

விற்பனை செய்த 5 சதவீத ஓஎன்ஜிசி நிறுவனப் பங்கில் 4.4% பங்கை வாங்கியது எல்ஐசி. இப்படி எல்ஐசியில் நிதி தொடர்பான முடிவுகள் பல எடுக்கப்பட்டபோது பெரிய அளவில் பிரச்சனைகளை உருவாக்கவில்லை . முழுவதுமாக அரசு நிறுவனமாக இருந்ததால் முடிவுகள் எடுப்பதில் பிரச்சனை இல்லாமல் இருந்தது. தனியார் பங்கீடு இருந்தால் இனி இதுபோன்ற முடிவுகள் எடுப்பதில் பிரச்சனைகள் எழ வாய்ப்புள்ளது. பட்டியலிடப்படுவதால் வெளிப்படைத்தன்மை வரும் என்றாலும், முதலீட்டு முடிவுகள் குறித்து இயக்குநர் குழுவில் எழும் சிக்கல்கள் தான் இப்போது பேசுபொருளாக இருக்கிறது. பங்குதாரர் யார் வேண்டுமானாலும் நிறுவனத்தின் முதலீடுகள் குறித்து கேள்வி எழுப்பலாம்.

தனியார் நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் பாலிசிதாரர்களுக்கு அதிகபட்ச போனஸை எல்ஐசி வழங்குகிறது. தனியார் நிறுவனங்கள் 10 சதவீத்தை பங்குதாரர்களுக்கும் 90 சதவீதத்தை பாலிசிதாரர்களுக்கும் வழங்குகிறது. எல்ஐசி பாலிசிதாரர்களுக்கும் 95 சதவீதத்தை வழங்குகிறது. அப்படி இருக்கும் பட்சத்தில் இந்த லாப பகிர்வு என்பது பங்குதாரர்களுக்கும் பாலிசிதாரர்களுக்கும் இடையே பிரச்சனையை உருவாக்கலாம். மேலும், எல்ஐசி தனது அனைத்துவிதமான நிதி நிலை நிகழ்வுகளையும், கடன் விவரங்களையும் "செபிக்கு" குறிப்பிட்ட காலத்தில் வழங்கியாக வேண்டும். பங்குதாரர்கள் அனைவருக்கும் விளக்கம் கொடுக்க வேண்டும்.

5 சதவீத பங்கை விற்பதால் என்ன ஆகிவிடப்போகிறது என்று கேள்விக்கு எல்ஐசி ஊழியர்கள் தரப்பில் சொல்லப்படுவது இதுதான். பங்குகளை வாங்கி உள்ளே வரும் கார்ப்பரேட்டுகள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வருவதில்லை, லாபம் ஈட்டுவதற்காக வருபவர்கள், மக்களுக்கு தர வேண்டிய 95 சதவீதத்தைக் குறைப்பார்கள். நிர்வாகக் கட்டமைப்பை சிதைப்பார்கள் என்கிறார்கள். இந்த வாதத்தையும் மறுக்க முடியாது காரணம், ரயில்வே, ஏர்வேஸ், வங்கிகள் என எல்லாவற்றிலும் தனியாரின் பங்களிப்பு சந்தையில் போட்டியை உருவாக்கி இருந்தாலும் மெல்ல அவை மக்களின் மீது அதிக செலவையும் திணித்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். தரமான சேவையைப் பெற அதிகம் செலவு செய்யத்தான் வேண்டும் என்ற போக்கு தனியார்மயம் அதிகரித்துவருவதால் தொடர்ந்து நிகழ்ந்திருக்கிறது.

காப்பீட்டு துறையில் பல தனியார் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் இருந்தாலும் எல்ஐசியின் இடத்தை நெருங்கக் கூட முடியவில்லை. அதற்கு முக்கிய காரணம் அரசு தரும் உத்தரவாதம் எல்ஐசியிடம் இருப்பதாலும், எல்ஐசி தனியார் நிறுவனங்களைக் காட்டிலும் சிறப்பான சேவைகளை வழங்கிவருவதும்தான். அரசு நிறுவனம் நன்றாக சேவை வழங்கினால் அதை தவிர்த்து வேறு தனியார் நிறுவனங்களை நாடி மக்கள் போவதில்லை என்பதற்கு சரியான உதாரணமாக எல்ஐசி இருக்கிறது. இப்போது அதற்கும் பங்கம் நேர்கிறதா என்ற எண்ணமும் எல்லோரிடமும் எழுந்துள்ளது.

எல்ஐசி விஷயத்தில் அரசு எடுக்கும் முடிவு நடுத்தர மக்களின் கடின உழைப்பால் சிறுக சிறுக சேர்த்த பணத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வெளிப்படைத்தன்மை அவசியம்தான். அதேசமயம் எல்ஐசி பாலிசியின் அரசு உத்தரவாதம் காக்கப்படும் என்றாலும், நிர்வாகத்திலும் நிதி தொடர்பான முடிவுகளிலும் எந்த பிரச்சனைகளும் எழுந்துவிடக்கூடாது. தனியார் பங்களிப்பை ஊக்குவித்தால் நிச்சயம் அது நிர்வாகத்திலும், நிதி சார்ந்த முடிவுகளிலும் மாற்றங்களை நிகழ்த்தவே அதிக வாய்ப்புள்ளது என்பதையும் மறுக்க முடியாது. எல்ஐசி மக்கள் சொத்து, நம் சொத்து அதை பாதுகாக்க வேண்டியது நமது கடமை. ●

# வேலை நிறுத்த ஆர்ப்பாட்டங்கள்

**நாகை**

இந்திய தேசம் காக்க இரண்டு நாட்கள் நடைபெறும் வேலை நிறுத்தத்தில் பங்கேற்று, நாகை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் பா.ராணி தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். சத்துணவு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் கே.இராஜூ, வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் தனஞ்செயன், ஓய்வூதியர் சங்க நிர்வாகி எம்.தமிழ்வாணன் மற்றும் பலர் உரையாற்றினர். புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் ப.அந்துவன்சேரல் நிறைவுரையாற்றினார். நாகை வட்டத் தலைவர் கே.இரவிச்சந்திரன் நன்றியுரையாற்றினார்.

**திருச்சி**

அனைத்து பொதுத் துறை சங்கம், மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நாடு தழுவிய இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் இரண்டாவது நாள் 29.03.2022 நிகழ்வில் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் A.பெரியசாமி கண்டன உரையாற்றினார். மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி, மாவட்ட செயலாளர் தோழர் பழனிச்சாமி, மாவட்ட பொருளாளர் தோழர் சுந்தர்ராஜ் மற்றும் அனைத்து துறை ஊழியர்களும் திரளாக கலந்து கொண்டார்கள்.

**கிருட்டினகிரி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14 ஆம் மாநில மாநாட்டின் அறைகூவல் தீர்மானத்தின்படி 2022, மார்ச்-28, 29 ஆகிய இரண்டு நாட்கள் அகில இந்திய வேலைநிறுத்தம் கிருட்டினகிரி மாவட்டத்தில் மிக எழுச்சியோடு நடைபெற்றது. அனைத்து அலுவலகங்களிலும் பரப்புரை மேற்கொள்ள 3,000 துண்டு பிரகரங்கள் மற்றும் 100 சுவரெட்டிகள் பயன்படுத்தப்பட்டன.

மார்ச் 28, 29 ஆகிய இரண்டு நாட்களிலும் கிருட்டினகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் "வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம்" நடத்தப்பட்டது. மாவட்ட தலைவர் தோழர் B.சந்திரன் தலைமை தாங்கிட மாவட்ட செயலாளர் தோழர் R.நடராஜன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். தோழமை சங்க தலைவர்கள் S. ஹரிராவ்-BEFI, தாமஸ்-AIIEA, C. கல்யாணசுந்தரம்-TNSEA,

M.சரவணன்-TNRDOA, RM.மஞ்சுளா -TNNMEA, K.பெரியசாமி-TNSOU,

M. திம்மராஜ் TNHREA,KCA தினேஷ்-PHDOA, A.மணி -TNNMEA,G வெங்கடேசன் TNMCOA, K. பெருமாள்-TNPA, M.நந்தகுமார், TNF-DEA, C. கோவிந்தராஜ் -TNCEA,T. உதயபானு -TNVHNA, இளவரசன் - SFI ஆகியோர் வேலைநிறுத்தத்தை ஆதரித்து உரையாற்றினர்.

இரண்டு நாள் அகில இந்திய வேலைநிறுத்தத்தில் வருவாய்த்துறை,

ஊரக வளர்ச்சித் துறை, நில அளவைத் துறை, நெடுஞ்சாலைத்துறை, பொது சுகாதாரத்துறை, வணிக வரித் துறை, நகராட்சி/மாநகராட்சி, மீன்வளத்துறை, பட்டு வளர்ச்சித் துறை, சமூக நலத்துறை, வேலைவாய்ப்புத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பேரூராட்சி ஆகிய துறைகளைச் சார்ந்த பெருவாரியான ஊழியர்கள் பங்கேற்றனர். கோரிக்கைகளை வலியுறுத்தி உரத்த குரலில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**சிவகங்கை**

மார்ச் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு தினங்களில் நடைபெறும் அகில இந்திய வேலைநிறுத்த போராட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சிவகங்கை மாவட்டத்தின் சார்பில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் கண்ணதாசன் தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் பாண்டி விளக்க உரையாற்றினார். தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ஜெயபிரகாஷ் மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர் மூவேந்தன் நெடுஞ்சாலை சாலை பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் சின்னப்பன் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் முத்துக்குமார், செயலாளர் மிக்கேல்லம்மாள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் மாரி மாவட்ட இணைச்செயலாளர் வினோத்ராஜா வட்டக் கிளை தலைவர் முத்தையா ஆகியோர் போராட்டம் குறித்து சிறப்புரையாற்றினார்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக வட்டக்கிளை செயலாளர் நடராஜன் நன்றி கூறினார்.

**மயிலாடுதுறை**

தேசம் காக்கும் 48 மணிநேர அகில இந்திய வேலை நிறுத்த போராட்டத்தின் இரண்டாவது நாளான அன்று 29.03.2022 காலை 10.30 மணிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் TNGEA மாவட்டத் தலைவர் தோழர் R.சிவபழனி தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. TNGEA மேனாள் மாவட்டத் தலைவர் தோழர் D.கணேசன் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் கோரிக்கைகளை விளக்கி பேசினார். TNROA மாவட்டத் தலைவர் தோழர் S.தென்னரசு, Income Tax ஊழியர் சங்க தோழர் R.தமிழன் கணேசன், அஞ்சலக RMS ஓய்வூதியர் சங்க பொறுப்பாளர் தோழர் சாமி கணேசன், TNRGEA தோழர் V.ராமகிருஷ்ணன், மாநில செயலாளர் தோழர் S.மகாலிங்கம், TNGPA மாவட்டத் தலைவர் தோழர் V.பழனிவேலு ஆகியோர் போராட்டத்தை வாழ்த்தி பேசினர். TNGEA மாவட்டப் பொருளாளரும், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளரும், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநிலத் தலைவருமான தோழர் R.கலா நிறைவுரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் தோழர் M.நடராஜன் நன்றி கூறினார். சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் துறைவாரி சங்க பேனர் மற்றும் கொடியுடன் தோழர்கள் போராட்ட பதாகையை கையில் ஏந்தியவாறு மத்திய அரசின் தனியார் மய கொள்கைக்கு எதிராக முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் 54 பெண்கள் (சத்துணவு ஊழியர்கள்) உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

**விழுப்புரம்**

அகில இந்திய வேலை நிறுத்தம் - 2ஆம் நாள் - விழுப்புரம் மாவட்டத்தில் இந்திய தொழிற்சங்க மையம் (CITU) உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கம் சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பங்கேற்பு மாவட்ட செயலாளர் தோழர்.சு சிவகுமார், மாவட்ட தலைவர் தோழர்.கு.சரவணன், மாவட்ட பொருளாளர் தோழர் க. அன்பழகன் மாவட்ட துணைத்தலைவர்கள் தோழர்.எஸ்.தேசிங்கு, தோழர்.எம்.எஸ். ஆதிசங்கரன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாவட்ட தலைவர் தோழர்.ஜெ.ஜெய்சங்கர், வானூர் வட்ட செயலாளர் பெ.கிருபாகரன், கண்டாச்சிபுரம் வட்ட செயலாளர் ர.சுதாகர், வட்ட பொருளாளர் தோழர். செந்தில், மரக்காணம் வட்ட செயலாளர் தோழர்.பி.தனசேகரன், செஞ்சி வட்ட செயலாளர் தோழர்.க.மனோகரன் வட்ட பொருளாளர் தோழர்.ப.திருவேங்கடம், விழுப்புரம் வட்ட தலைவர் தோழர். கோவிந்தராஜூலு, தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட செயலாளர் தோழர்.நந்தகுமார், தோழர்.சுந்தரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

**கடலூர்**

29.03.2022 அன்று கடலூர் பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் காலை 10.30 மணி அளவில் இரண்டாம் நாள் அகில இந்திய வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடலூர் மாவட்டம் மற்றும் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் கடலூர் மாவட்டம் இணைந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

**ஈரோடு**

1. தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றுபவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிடக் கோரி... 2.CPS திட்டத்தை ரத்து செய்திடக் கோரி... 3. பொதுத்துறைகளை தனியாருக்கு விற்கும் முடிவை கைவிடக் கோரி 4.மத்திய மாநில அரசுத்துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிடக்கோரி உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக நடைபெற்றுவரும் அகில இந்திய வேலை நிறுத்தத்தின் இரண்டாம் நாளான 29.03.2022 அன்று செவ்வாய்க்கிழமை மாவட்ட தலைநகர் ஆர்ப்பாட்டம் ஈரோடு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், காலை 11.00 மணிக்கு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத் தலைமை தோழர் அ. ராக்கிமுத்து மாவட்டத் தலைவர் TNGEA தோழர் க.ராஜ்குமார் முன்னாள் மாநிலத் தலைவர் TNGEA, தோழர் அ.குபேரன் மாநிலச் செயலாளர் TNGEA, தோழர் S.சுப்பிரமணியன் மாவட்டத் தலைவர் இந்திய தொழிற்சங்க மையம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்

**சேலம்**

29.3.2022 அன்று அகில இந்திய வேலை நிறுத்தத்தின் முதல்நாளில் சேலம் மாவட்டத்தில் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவன-ங்களின் கூட்டமைப்போடு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும், தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கமும் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தினை மிக வெற்றிகரமாக நடத்தி உள்ளோம். ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கமும் இணைந்து சுமார் 74 பேர் பேரணியாக கோஷமிட்டவாறு சென்று பங்கேற்றது இதுவரை இல்லாத அளவில் எழுச்சி கரமாக இருந்தது. ஆர்ப்பாட்ட கூட்டத்தில் நமது தோழர்களின் பங்களிப்பு மிக, மிக சிறப்பாக இருந்தது. ஆர்ப்பாட்ட கூட்டத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் சார்பில் மாவட்ட துணைத்தலைவர் தோழர்

கோபால் அவர்களும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் தோழர் சுப்பிரமணியன் அவர்களும், தமிழ்நாடு ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணியின் சரவணன் அவர்களும், பொது சுகாதாரத்துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் தோழர் செல்வம் அவர்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் சுரேஷ் அவர்களும் எழுச்சி உரையாற்றினார்கள், அகில இந்திய வேலைநிறுத்தப் போராட்டத்தில் முதலாம் நாளில் எழுச்சி கரமாக பங்கேற்ற அனைத்து தோழர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட மையத்தின் சார்பில் புரட்சிகரமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

**கள்ளக்குறிச்சி**

அன்று 29.3.22 நடைபெற்ற இரண்டாம் நாள் அகில இந்திய பொது வேலை நிறுத்தம் கள்ளக்குறிச்சியில் பொதுத்துறை சங்கங்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது உடன் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தொமுச சிஐடியு ஏஐ டீ யு சி அங்கன்வாடி ஊழியர்கள் சங்கம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குனர் சங்கம்ஐ என் டி யூ சி தொழிலாளர்கள் சங்கம் எல்ஐசி ஊழியர் சங்கம் மின்சார வாரிய ஊழியர் சங்கம் வங்கி ஊழியர் சங்கம் உடன் தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் நிர்வாகிகள் சத்துணவு சங்க நிர்வாகிகள் கிராம சுகாதார செவிலியர் சங்க நிர்வாகிகள் வருவாய்த்துறை அலுவலர் சங்க நிர்வாகிகள் சாலை பணியாளர் சங்க நிர்வாகிகள் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க நிர்வாகிகள் நில அளவை ஒன்றிய நிர்வாகிகள் பங்கேற்றனர்

**வேலூர்**

அகில இந்திய பொது வேலைநிறுத்தம் நாள் 29.3.22 அன்று வேலூர் மாவட்டத்தில் மிக சக்தியாக மிக எழுச்சியாக நடைபெற்றது மாவட்டதலைவர் ஜெயசீலன் தலைமை ஏற்று நடத்தினார் செயலாளர் செந்தில் குமார் சிறப்புறை ஆற்றினார் வருவாய்துறை தோழர் ஜோஷி, கல்வித்துறை தலைவர் சேகர் மற்றும் ஆசிரியர் கூட்டமைப்பு தோழர்கள் பங்கேற்று சிறப்புறை ஆற்றினர் ஆர்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது

**திருப்பூர்**

29.03.2022 அன்று அகில இந்திய வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டம்.... நடைபெற்றது 1) திருப்பூர் தெற்கு வடக்கு வட்ட கிளை களை ஒன்றிணைந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 2) உடுமலைப்பேட்டை வட்ட கிளை உடுமலை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.... 3) தாராபுரம் பட்ட கிளையில் தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 4) காங்கேயம் வட்ட கிளையில் காங்கேயம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 5) மடத்துக்குளம் வட்ட கிளையில் மடத்துக்குளம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 6) பல்லடம் வட்ட கிளையில் பல்லடம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.... 7) அவிநாசி வட்ட கிளையில் அவிநாசி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 8) ஊத்துக்குளி வட்ட கிளை ஆர்ப்பாட்டம் ஊத்துக்குளி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது.. தோழர்களே 28-29 இரண்டு நாட்கள் நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தம் தேசம் காக்கும் போராட்டத்தில் பங்கெடுத்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து தரப்பு அரசு ஊழியர்கள்

அனைவருக்கும் மாவட்ட மையம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ராணிப்பேட்டை**

இன்று அகில இந்திய வேலை நிறுத்த போராட்டத்திற்கான ஆர்பாட்டம் அரசு ஊழியர் சங்கத்தின் இராணிப்பேட்டை மாவட்ட தலைவர் தோழர் ஜோசப் கென்னடி அவர்கள் தலைமையில் இனிதே நடந்து முடிந்தது ஆர்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் மாவட்ட மையத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்

**சென்னை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வட சென்னை தென் சென்னை மற்றும் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஊழியர் சங்கங்களின் சென்னை மாவட்ட போராட்டக்குழு சார்பில் கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிக வரி வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது முதல் நாள் வேலை நிறுத்தத்தில் வணிகவரித் துறை பணியாளர் சங்கத்தின் மாநில செயலாளரும் அரசு ஊழியர் சங்கத்தின் தென் சென்னை மாவட்ட தலைவருமான கலைச்செல்வி அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது கோரிக்கைகள் குறித்து சென்னை மாவட்ட போராட்டக்குழு அமைப்பாளர் அந்தோணிசாமி அவர்களும் அகில இந்திய வேலைநிறுத்த நோக்கங்கள் குறித்து வேளாண்மைத் துறை அமைச்சு பணியாளர் சங்கத்தின் மாநில பொருளாளர் சுமதி அவர்களும் இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மற்றும் அரசு ஊழியர் சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளருமான தோழர் வாசுகி அவர்களும் அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் டேனியல் ஜெயசிங் அவர்களும் தமிழ் நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கத்தின் மாநில செயலாளர் ஏழுமலை அவர்களும் பேசினார்கள். இறுதியாக அரசு ஊழியர் சங்க மாநிலத்தலைவர் மு.அன்பரசு அவர்கள் நிறைவுரையாற்றினார். வணிகவரி பணியாளர் சங்கத்தின் சென்னை மாவட்ட செயலாளர் ரவிராஜ்அ வர்கள் நன்றி கூற ஆர்ப்பாட்டம் நிறைவுபெற்றது. இருபத்தி ஏழு பெண்கள் உட்பட 92 பேர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார்கள். வாழ்த்துக்களுடன். மாவட்ட அமைப்பாளர் அனைத்து சங்களின் போராட்டம் குழு சென்னை மாவட்டம்.

**மதுரை**

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் இணைந்த வேலைநிறுத்த ஆர்ப்பாட்டம் இடம் 29/03/2022 மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மதுரை ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத்தலைவர் ஜெ.மூர்த்தி தலைமை தாங்கினார் துவக்கவுரை KPO.சுரேஷ், STFI அகில இந்திய பொதுச்செயலாளர் கோரிக்கை விளக்கவுரை ஸ்ரீரங்கநாதன், மாவட்டத்தலைவர் மேல்நிலை உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகம் (கள்ளர்பள்ளி கிளை) எமிமால் ஞானசெல்வி மாவட்ட துணைச்செயலாளர், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி P. அய்யங்காளை , மாவட்டத்தலைவர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் தூ.முருகன், மாநிலச்செயலாளர், தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம் பாலமுருகன், மாவட்டச்செயலாளர், தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கம் இரா.தமிழ், மாநிலப்பொருளாளர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கம் முருகன், மாவட்டத்தலைவர் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம் நிறைவுரை ஆ.செல்வம், பொதுச்செயலாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நன்றி க.நீதிராஜா, மாவட்டச்செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 12பெண்கள் உட்பட 68பேர் கலந்து கொண்டனர் ●



# சர்வதேச மகளிர் தின விழா

**வட சென்னை**

தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் வடசென்னை மாவட்ட குழு சார்பில் மகளிர் தின கருத்தரங்கம் திருவல்லிக்கேணியில் மாவட்ட தலைவர் ப.சுந்தரம்மாள் தலைமையில் நடைபெற்றது. இதில் எத்திராஜ் மகளிர் கல்லூரி இணை பேராசிரியர் முனைவர் அரங்க மல்லிகா, மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினர் உ.சுமதி, இணைச் செயலாளர் ஜெ.சரஸ்வதி ஆகியோர் பேசினர்.முன்னதாக மாவட்ட அமைப்பாளர் அ.சுமதி வரவேற்றார். மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் த.வாசுகி நன்றி கூறினார்.

**தென் சென்னை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தென்சென்னை மாவட்டத்தின் சார்பாக சைதாப்பேட்டையிலுள்ள ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்தில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் 08.04.2022 மாலை 4 மணியளவில் மாவட்டத் தலைவர் தோழர் சி.கலைச்செல்வி தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர். ரேணுகாதேவி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ரம்யம் கல்வி அறக்கட்டளை நிறுவனர் திருமிகு மு.ரம்யா அசோக் சிறப்புரையாற்றினார். சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் தோழர் தெ. வாசுகி மற்றும் மாநிலச் செயலாளர் தோழர் உ சுமதி ஆகியோர் வாழ்த்துரை வழங்க மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர் புயலி நன்றியுரை ஆற்றினார்.

**திருவள்ளூர்**

திருவள்ளூர் மாவட்டத்தின் சர்வதேச மகளிர் தின விழா 08.03.2022 அன்று வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் திருவள்ளூரில் மாலை 2 மணிக்கு மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் க.வெண்ணிலா தலைமையில் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் தொழர் க.திவ்யா வரவேற்புரை வழங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் இரா பாண்டுரங்கன் அவர்களும் ஊரக வளர்ச்சித் துறையின் மாநிலச் செயலாளர் எஸ் காந்திமதிநாதன் அவர்களும் வருவாய்த்துறையின் மாவட்ட செயலாளர் ஏ.மணிகண்டன் அவர்களும் ஐசிடிஎஸ் மாவட்டத் தலைவர் தோழர் மணிமேகலை அவர்களும் சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகி தோழர் காந்தி அவர்களும் VHN மாநில நிர்வாகி தோழர் அமுதா அவர்களும் நீதித்துறை ஊழியர் சங்கத்தை சேர்ந்த தோழர் ராணி அவர்களும் வருவாய்த் துறையின் மாவட்ட இணைச்செயலாளர் வசந்தி அவர்களும் ஊரக வளர்ச்சித் துறையின் மாநில மகளிர் துணைக் குழு கோதை முருகன் அவர்களும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களும் மகளிர் தினத்தை பற்றி வாழ்த்தி பேசினார். அரசு ஊழியரின் போர்வாளாய் திகழ்கிற அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் உ. சுமதி அவர்கள் சிறப்பான கருத்துரை யாற்றினார். சிறப்பு அழைப்பாளர் மூ ரம்யா அசோக், கல்வியாளர் அவர்கள் சமூகத்தில் பெண்களின் நிலை குறித்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து அரசு

ஊழியர் சங்கத்தின்2021 போராட்டமான கோட்டை முற்றுகை போராட்டம் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் கலந்து கொண்டு களமாடிய அனைத்து மாவட்ட வட்ட கிளை பெண் தோழர்களுக்கும் மரியாதை செலுத்தி நினைவு பரிசு அளித்து கவுரவிக்கப் பட்டது. மாநில செயலாளர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் நினைவு பரிசும் புத்தகமும் மாவட்ட மகளிர் அமைப்பாளர் சார்பில் அளித்து கௌரவிக்கப்பட்டது கூட்டத்திற்கு ஆண் தோழர்கள் 20மற்றும் பெண் தோழர்கள் 115பேர் கலந்து கொண்டனர் வேளாண்மை துறையின் மாவட்டச் செயலாளர் ஜே ஜெகதீஸ்வரி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**தஞ்சை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தஞ்சாவூர் மாவட்ட மையத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தினக் கருத்தரங்கம் தஞ்சையில் 12.03.2022 அன்று மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் ச. செல்வி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அ.ரெங்கசாமி அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். மாநிலச் செயலாளர் தோழர் சா. கோதண்டபாணி துவக்கி வைத்து உரையாற்றினார். “ஆதியில் பெண்களும் இருந்தார்கள்” என்ற தலைப்பில் தஞ்சை அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் மகேஸ்வரி கருத்துரையாற்றினார். மாவட்டத் தலைவர் சிவ. இரவிச்சந்திரன் மற்றும் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலச் செயலாளர் தோழர் ச. ஹேமலதா சிறப்புரையாற்றினார். மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் பாரதி நன்றி கூறினார்.

**திருவாரூர்**

திருவாரூர் மாவட்ட மையம் சார்பில் 26. 03. 22 காலை திருவாரூர் TNROA மாவட்ட மைய சங்க கட்டிடத்தில் உலக மகளிர்தின விழா, மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர்..டி.தமிழ்சுடர் தலைமையில் நடைபெற்றது.. TNGEA மாநில செயலாளர் தோழர்.எஸ். கோதண்டபாணி துவக்கவுரை நிகழ்த்தினார். மாவட்ட தலைவர் தோழர்.வெ.சோமசுந்தரம் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தார். மாவட்ட பொருளாளர் தோழர்..செ.செங்குட்டுவன், மாவட்ட துணைத்தலைவர் தோழர்.பி. மகாலிங்கம், வட்ட செயலாளர் தோழர். என்.தம்பிதுரை, மகளிர் குழு தோழர்கள்.ஏ.லதா, பி.பரமேஸ்வரி, எஸ். சகிலா, எஸ்.ராஜேஸ்வரி, எஸ் .செல்வா, எஸ்.அமுதா, எஸ்.புனிதா உள்ளிட்ட பெண் தோழர்கள் பெண்கள் முன்னேற்றம் குறித்தும், பெண்கள் படும் கடும் நெருக்கடிகளையும் குறித்து பேசினர். இறுதியாக இந்திய தொழிற்சங்க மையத்தின் (CITU) மாவட்ட தலைவர் இரா.மாலதி நிறைவுரை ஆற்றினார். இறுதியாக கருத்தரங்கத்தில் கலந்துக்கொண்டவர்களுக்கு மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர். எஸ்.மகாலெட்சுமி நன்றி கூறினார். கருத்தரங்கத்தில் 37 பெண் தோழர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

**நாகப்பட்டினம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில், சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் 28.03.22 அன்று, நாகப்பட்டினம் அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் மாவட்டத் தலைவர் பா.ராணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் வே.சித்ரா வரவேற்புரையாற்றினார்.

மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் கே.பாலாம்பாள், கே.ஜோதிலெட்சுமி, டி. சசிகலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இணைச் செயலாளர்கள் ஜெ. ஜம்ருத் நிஷா, எஸ்.துர்க்காம்பிகா ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாநிலச் செயலாளர் எஸ்.ஹேமலதா அவர்கள் நேரடியாக பங்கேற்க இயலாததால் " மானமும் அறிவும்... " என்ற தலைப்பிலான அவரது கருத்துரை மேடையில் வாசிக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் நிறைவுரையாற்றினார். நாகை வட்ட துணைத் தலைவர் என். அமுதா நன்றியுரையாற்றினார். என்பது மகளிர் உட்பட நூறு நபர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

**கிருஷ்ணகிரி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருஷ்ணகிரி மாவட்ட மையத்தின் சார்பில் 25.03.2022 வெள்ளிக்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு "மகளிர் தின கருத்தரங்கம்" கிருஷ்ணகிரியில் உள்ள தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக கட்டடத்தில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் K.ஜெகதாம்பிகா தலைமை தாங்கினார். மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர் J.சாந்தி வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் தோழர் B.சந்திரன் துவக்கவுரையாற்றினார். தோழமை சங்க நிர்வாகிகள் தோழர்கள் C.கல்யாணசுந்தரம்,M.நந்தகுமார், KCA தினேஷ், SK தனலட்சுமி, RM மஞ்சுளா, K. பெருமாள், C.திருநாவுக்கரசு, G. வெங்கடேசன், கலைச்செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கிருஷ்ணகிரி மாவட்ட துணை ஆட்சியர் மதிப்புமிகு D. பாக்கியலட்சமி அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.மகளிர் துணைக்குழு சார்பில் நினைவுப் பரிசாக புத்தகம் வழங்கப்பட்டது.

"புவியை நடத்து புரட்சி பெண்ணே"

என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் தோழர் G.பழனியம்மாள் அவர்கள் கருத்துரை வழங்கினார். மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர் K. கனகவள்ளி நன்றி கூறி கருத்தரங்கை நிறைவு செய்தார். இதில் 42 பெண் தோழர்கள் உட்பட 78 பேர் பங்கேற்றனர். மாவட்ட செயலாளர் தோழர் R.நடராஜன் கருத்தரங்க நிகழ்வுகளை ஒருங்கிணைப்பு செய்தார்.

**சேலம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் மகளிர் தின விழா இன்று 16.3.22 மாலை 4 மணி அளவில் சிவில் இன்ஜினியர்ஸ் அசோசியன் கட்டடத்தில் அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் திருவரங்கன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் வள்ளி தேவி வரவேற்புரையாற்றினார். மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் மா. இராணி சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமிகு விஷ்ணுவர்தனி, மருத்துவம் மற்றும் ஊரக குடும்பநல துணை இயக்குனர் டாக்டர் வளர்மதி, மருத்துவ பணிகள் (தொழுநோய்) துணை இயக்குனர் டாக்டர் குமுதா, தொழிற்சங்க தலைவர்கள் தெய்வ ஜோதி யுவராணி, சரிதா செல்வி, தெவிட்டா மணி,ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அனைத்து இந்திய ஜனநாயக மாதர் சங்க அகில இந்திய துணைத் தலைவர் திருமிகு வாசுகி, சேலம் மாமன்ற துணைமேயர் திருமதி சாரதா தேவி சிறப்புரையாற்றினர். அமராவதி, மாவட்ட மகளிர் குழு உறுப்பினர் நன்றி கூறி கருத்தரங்கை நிறைவு செய்தார். கூட்டத்தில் அரசு ஊழியர் மகளிர்கள் 180 பேர் பங்கேற்றனர்.

**திருப்பூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருப்பூர் மாவட்டத்தில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் 24.03.2022 மதியம் 03.00 மணிக்கு உடுமலை தளி சாலையில் பேரணியாக சென்று கொடியேற்று நிகழ்வுடன் நடந்தது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.ராணி அவர்கள் ஏற்றினார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியினை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில துணைத் தலைவர் தோழர் சி.பரமேஸ்வரி ஏற்றிவைத்து முறையாக சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் உடுமலை அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் தோழர்A.ராணி தலைமையில் நடைபெற்றது வரவேற்புரை T.புஷ்பவல்லி மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் விளக்கவுரை A.ராஜேஸ்வரி அமைப்பாளர் மாவட்ட மகளிர் துணைக்குழு சிறப்புரை.சி.பரமேஸ்வரி அமைப்பாளர் மாநில மகளிர் துணைக்குழு நிறைவுரை. மா.பாலசுப்பிரமணியன் மாவட்ட செயலாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருப்பூர் மாவட்டம். முன்னிலை. P.பாக்கியம்.V.அன்னம்இமாகுலேட். கீதா. P.பாண்டியம்மாள். R.பரிமளா. S.ராணி. N. கண்ணஞ்சி. M.விஜயலட்சுமி. ★தமிழரசி. P.ஜெயக்குமாரி. காட்டு ராணி முன்னிலை

வகித்தனர். நன்றியுரை.V.ஈஸ்வரி மாவட்ட மகளிர் துனைக்குழு உறுப்பினர். சர்வதேச மகளிர் தின கருத்தரங்களில் 150 பெண்கள் 20 ஆண்கள் உட்பட 170 பேர் பங்கேற்றனர் நிறைவில் மார்ச் 28.29 அகில இந்திய வேலைநிறுத்தத்தில் தாராபுரம் உடுமலை மடத்துக்குளம் அவினாசி பல்லடம் காங்கேயம் ஊத்துக்குளி உள்ள வட்டக்கிளைகளில் திருப்பூர் தெற்கு வடக்கு வட்டக்கிளைகளைகள் இரண்டும் சேர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டங்களில் மகளிர் துனைக்குழு உறுப்பினர் அனைவரும் பங்கேற்க முடிவு செய்யப்பட்டது.

**மதுரை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் - மதுரை மாவட்டம் உலக மகளிர் தின கருத்தரங்கம் 25/03/2022 மாலை 6மணிக்கு சங்க கட்டடத்தில் நடைபெற்றது தோழர்.D.ராஜீ,மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தலைமை தாங்கினார். தோழர் S.பாண்டிச்செல்வி, வரவேற்புரையாற்றினார். மாவட்டத்தலைவர் ஜெ.மூர்த்தி துவக்கவுரையாற்றினார். கருத்துரை தோழர்.கா.பிருந்தா, மாநில இணைச்செயலாளர், தோழர்.ஆ.செல்வம், பொதுச்செயலாளர், TN-GEA தீர்மானங்கள் 1.தமிழக முதல்வரின் பெண்களுக்கான இலவச பேருந்து சேவை அறிவிப்பு வரவேற்கப்படுகிறது. 2.அனைத்து அலுவலகங்களிலும் உச்ச நீதிமன்ற உத்தரவின்படி "விசாகா கமிட்டி" அமைக்க வேண்டும் 3.அரசு அலுவலகங்களிலும் பணிபுரியும் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும் 4.அனைத்து அரசு அலுவலகங்களிலும் பெண்களுக்கென தனி கழிவறை வசதி ஏற்படுத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் ஆனந்தவள்ளி, பஞ்சவர்ணம், அ.தமிழ்செல்வி, சகாயசாந்தி உள்ளிட்ட தோழர்களால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தோழர்.A.சீதை நன்றியுரையுடன் இனிதே நிறைவுற்றது. வந்திருந்த மகளிர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் க.நீதிராஜா, மாவட்டச்செயலாளர், மாவட்டத்துணைத்தலைவர் தூ.முருகன், பெ.சந்திரபாண்டி,மாவட்ட இணைச்செயலாளர் ஆ.பரமசின், க.சந்திரபோஸ்,மாநில செயற்குழு உறுப்பினர் இரா.தமிழ், வட்டக்கிளை நிர்வாகிகள் சு.பழனிவேல், அய்யங்காளை, சோமசேகர்,பாஸ்கரன், மாநகராட்சி பொறியியல் பிரிவு பணியாளர் சங்கத்தின் K.T.துரைக்கண்ணன், கண்ணன்(சொசைட்டி) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 126மகளிர் கலந்து கொண்டனர். ●



தூத்துக்குடி மாவட்டத்தில் 2019ல் நடைபெற்ற ஜாக்டோ ஜியோ காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் காவல்துறையினரால் பொய் வழக்கு போடப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்ட தோழர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மிகப்பெரிய போராட்டத்திற்கு பின்பு தமிழக அரசு ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் தொடரப்பட்ட வழக்குகளை ரத்து செய்த நிலையில் தூத்துக்குடி முதன்மை நீதிமன்றத்தின் மூலம் இவர்களின் 1. சுப்ரமணியன்(காமராஜ் கல்லூரி) 2.தங்கவேல்(சுகாதார துறை) 3.மகாராஜன்(மீன்வளத்துறை 4. அண்ணாமலை பரமசிவம்(நில அளவைத் துறை) 5.சக்தி உடையார் (மீன்வளத்துறை) 6.குப்புசாமி (ஆசிரியர், உயர் நிலைப்பள்ளி) 7.மாரிப்பாண்டி(ஆசிரியர், உயர் நிலைப்பள்ளி)மேல் தொடரப்பட்ட பொய் வழக்குகள் அனைத்தும் முடித்து வைக்கப்படுகிறது என்று தூத்துக்குடி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார் ●

# துறைசங்க நிகழ்வுகள்

தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்க மாநில செயற்குழு 26.03.2022 அன்று மாநிலத் தலைவர் எஸ். பிரபுராம் தலைமையில் திண்டுக்கல், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ராமசாமி அனைவரையும் வரவேற்றார். மாநிலச் செயலாளர் கோ.ஆ. அசோகன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். முன்னாள் மாநிலத் தலைவர் ரவிசந்திரன் துவக்கவுரையாற்றினார். பொதுச்செயலாளர் ஆர்.என். நம்பிராஜன் வேலை அறிக்கையையும், பொருளாளர் நிநிதிநிலை அறிக்கையையும் செயற்குழுவில் வைக்கப்பட்டு செயற்குழு உறுப்பினர்களின் விவாத்திற்கு பின் தொகுப்புரை வழங்கப்பட்டது. முன்னாள் மாநில துணைத் தலைவர் வனசேகரன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எஸ். முபாரக்அலி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் மு. செல்வராணி ஆகியோர் வாழ்த்துரையாற்றினார். மாநில செயற்குழுவில் 2022, மார்ச் 28, 29ல் நடைபெறும் தேசம் தழுவிய வேலை நிறுத்தத்தில் முழுமையாக பங்கேற்பது, காலியாக உள்ள 3000க்கும் மேற்பட்ட நிர்வாக ஊழியர் பணியிடங்களை நிரப்புவது, தேனி உளளிட்ட பல்வேறு மருத்துவமனைகளல் புதிய நிர்வாக பணியிடங்களை போர்கால அடிப்படையில் உருவாக்குவது, பதவி உயர்வினை காலதாமதமின்றி வழங்குவது உள்ளிட்ட 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது, மாவட்டங்களின் அதிகரிப்பிற்கு ஏற்ப நிர்வாகிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் பொருட்டு புதியதாக 4 நிர்வாகிகள் சேர்க்கப்பட்டு பின்வரும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அந்தோணிஜெயராஜ் நன்றி கூறினார்.

மாநிலத் தலைவர் : ம.பா. விவேகானந்தன் மாநில துணைத்தலைவர்கள்:கு, சாதிக்பாஷா, சி. கண்ணன், க, நீதிராஜா, சு.செந்தில்குமார், மூவேந்திரன், மாரிமுத்து பொதுச்செயலாளர் : ஆர்.என். நம்பிராஜன் மாநிலச் செயலாளர்கள்: கோ. வெங்கோபராவ், என். மணிமாலா, அருள்பிரகாசம், முத்துபாண்டி, ராமமூர்த்தி, மணிகண்டன் மாநிலப் பொருளாளர் : கோ.ஆ. அசோகன் மாநில தணிக்கையாளர்கள்: அசோகன்(தருமபுரி) முனுசாமி(தஞ்சாவூர்) ●




தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு, மாநில மையத்தின் சார்பாக சென்னையில் 09.03.2022 அன்று 16.அம்ச கோரிக்கை வலியுறுத்தி பெருந்திரள் முறையீடு நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் துணை பொதுச்செயலாளர் தோழர் மங்கள பாண்டியன், மாநிலச் செயலாளர் தோழர் தண்டபாணி, மாநிலத் துணைத் தலைவர் தோழர் செல்வராணி வாழ்த்துரை வழங்கினார்கள். மாநில பொதுச்செயலாளர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார்.

# நிகழ்வுகள்

**பயிற்சி வகுப்பு**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருட்டினகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டக்கிளையின் சார்பில் 05.03.2022 சனிக்கிழமையன்று சங்க பயிற்சி வகுப்பு தேன்கனிக்கோட்டை சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. வட்டக்கிளை நிர்வாகிகள், துறை சங்க நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் கலந்துகொண்ட இப்பயிற்சி வகுப்பிற்கு வட்டக் கிளை தலைவர் தோழர் C. திருநாவுக்கரசு தலைமை தாங்கினார். வட்ட செயலாளர் தோழர் S.முருகேசன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் தோழர் B.சந்திரன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட செயலாளர் தோழர் R.நடராஜன் பயிற்சி வகுப்பை துவக்கிவைத்தார்.

"சங்க வரலாறு மற்றும் ஸ்தாபனம்"

என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் M.சீனிவாசன் அவர்கள் வகுப்பெடுத்தார். ஒன்றரை மணி நேர வகுப்பிற்குப் பின் கேள்வி நேரத்திற்கு 30 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டது. துணைப் பொதுச் செயலாளர் தோழர் M.சீனிவாசன் அவர்களுக்கு நினைவுப் பரிசாக புத்தகம் வழங்கப்பட்டது. இறுதியில் வட்ட பொருளாளர் தோழர் U. சம்சுல் ஆலம் நன்றி கூறி பயிற்சி வகுப்பை நிறைவு செய்தார். இதில் 30 பெண் தோழர்கள் உட்பட 49 பேர் கலந்துகொண்டார்.

**திருவள்ளூர் புத்தகத் திருவிழா**

திருவள்ளூரில் முதல்முறையாக நேற்று துவங்கி நடைபெற்றுக்கொண்டிருக்கும் புத்தக கண்காட்சி திருவிழாவிற்கு சுமார் 5000 பெறுமானமுள்ள புத்தகத்தை வாங்கி நமது மரியாதைக் குரிய மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நட்சத்திரப் பேச்சாளர் ஈரோடு மகேஷ் அவர்களின்




மூலம் நமது மாவட்ட தலைவர் பெற்றுக்கொள்கிறார். மாவட்ட செயலாளர் மாவட்ட துணைத் தலைவர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் நமது சங்கம் முற்போக்கு சிந்தனைகளை கொண்ட அமைப்பு ஆகையால் துவக்க விழாவிற்கு நமக்கு அழைப்பு விடுத்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாவட்ட மையத்தின் சார்பாக நன்றி. புத்தக திருவிழா திருவள்ளூரில் வெற்றி பெற வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

●

# முறையீடுகள்

**திருச்சி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்ட மையத்தின் சார்பில் 23.03.2022 அன்று மதிய உணவு இடைவேளையின் போது மாவட்ட தலைவர் தலைமையில் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை முதல்வரை நேரில் சந்தித்து நேற்று மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் பணியாற்றும் செவிலியர் திருமதி சாரால் மேரிக்கு உரிய சிகிச்சை அளிக்காதை கண்டித்து பேசப்பட்டது. உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க கோரப்பட்டது. மேலும் கோரோனா ஊக்கத்தொகை, முதல்வர் காப்பீட்டு திட்டத்தில் பணியமர்த்த பட்டு 10 ஆண்டுக்கு பின் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டுமென உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி பேசப்பட்டது, கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. தொடர்ந்து ஊழியர் விரோத போக்கினை கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சந்திப்பின்போது மாவட்ட தலைவர் தோழர் பால் பாண்டி, மாவட்ட செயலாளர் தோழர் பழனிச்சாமி, மாவட்ட பொருளாளர் தோழர் சுந்தர்ராஜ், மாவட்ட துணைத் தலைவர் தோழர் சகாதேவன், திருச்சி 1 வட்டக்கிளை தலைவர் தோழர் சுரேஷ்பிரபு மற்றும் எம்ஆர்பி செவிலியர்கள் சங்க மாவட்ட செயலாளர் தோழர் கலையரசி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

**வட சென்னை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வட சென்னை மாவட்டத்தின் சார்பில் பொதுப்பணித்துறை பணிமனை பண்டக சாலை தொடர்ந்து செயல்பட கோருதல் சம்பந்தமாக அத்துறையின் தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) அவர்களை சந்தித்து கோரிக்கை மனுவை வழங்கி விரிவான பேச்சுவார்த்தையும் நடைபெற்றது.



அதனடிப்படையில் பணிமனையை விரிவாக்குவதற்கும் தொழில்நுட்ப ஊழியர்களை பணியமர்த்து வதற்கும் மேலும் அங்குள்ள பணிகளை தமிழகம் முழுவதும் விரிவுபடுத்துவதற்கும் முயற்சி செய்வதாகவும் அதற்கு உரிய வழிவகைகளை அரசுக்கு கருத்துருவாக தயார் செய்வதாகவும் தலைமை பொறியாளர் கூறியுள்ளார். ●




Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com